# தகவல்களைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கின்றது

இலங்கையில் தகவல் அறியும் உரிமை பொறிமுறையின் செயற்பாடு குறித்த ஆய்வறிக்கை

RIGHT TO LIFE HUMAN RIGHTS CENTER

# தகவல்களைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கின்றது

## இலங்கையில் தகவல் அறியும் உரிமை பொறிமுறையின் செயற்பாடு குறித்த ஆய்வறிக்கை


RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

ரைட் டு லைஃப் மனித உரிமைகள் மத்திய நிலையம்

2023 யூண்

**ரைட் டு லைஃப் மனித உரிமைகள் மத்திய நிலையம்**

**2023 யூண்**

பங்களிப்பு

| | | |
|---|---|---|
| எழுத்தாளர் | : | சுனேத் கஜநாயக்க |
| ஆசிரியர் | : | துலான் தசநாயக்க (AAL) |
| திட்ட ஒருங்கிணைப்பு | : | தினிதி சுபேக்ஷலா. |
| அச்சிடுதல் | : | டிசைன்ஸ் சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட். |
| வெளியீடு | : | ரைட் டு லை.்.ப் மனித உரிமை மையம். |

# உள்ளடக்கம்


முன்னுரை ........ 5

அறிமுகம் ........ 7

ஆய்வின் நோக்கம் ........ 8

ஆய்வின் வரையறைகள் ........ 8

ஆய்வின் விதிமுறை ........ 8

1. தகவலுக்கான சட்டத்தின் பயணப் பாதை ........ 10

2. தகவல்களை அறிவதற்கான உரிமை ........ 13

3. 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் ........ 14

4. தகவலுக்கான உரிமை ஆணைக்குழு ........ 16

4.1 ஆணைக்குழுவின் கடமைகள், பணிகள் மற்றும் தத்துவங்கள் ........ 17

4.1.1 தகவலுக்கான உரிமை ஆணைக்கழுவின் கடமைகளும் பணிகளும். (14ம் வாசகம்) .. 17

4.1.2. சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஆணைக்குழுவின் தத்துவங்கள் ........ 18

5. தகவல் அறிவதற்கான பொறிமுறை ........ 20

5.1 தகவல்களைக் கோருதல் ........ 20

5.2 மேன்முறையீட்டு செயல்முறை ........ 22

5.3 ஆணைக்குழுவிடம் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல். ........ 22

6. தகவலுக்கான உரிமையை பகிரங்க அதிகாரசபைகள் தடைசெய்வதும் அத் தடைகளைத் தடுப்பதில் தகவலுக்கான ஆணைக்குழுவின் செயற்பாடும் ........ 24

7. தகவலுக்கான ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளும் செயற்பாடும் ........ 28

8. பகுப்பாய்வு - 2018 முதல் 2022ம் ஆண்டு வரையான தகவலுக்கான பொறிமுறையும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடும். ........ 33

8.1 2018, 2019, 2020, 2021ம் ஆண்டுகளில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் அளவு ........ 33

8.2 விசாரித்து முடித்த மற்றும் பிற்போடப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை ........ 34

8.3 ஆணைக்குழுவின் தீர்ப்பு ........ 34

8.4 2021.12.20ம் திகதியிலிருந்து 2022.12.31ம் திகதிவரை ஆணைக்குழுவின் மேன் முறையீட்டு விசாரணை தொடர்பான புள்ளி விபரம் ........ 34

8.5 2022ம் ஆண்டு ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு விசாரணை ........ 35

8.6. 2022ம் ஆண்டு மே மாதம் முதல் 2023ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலான மனித உரிமைகள் முதலுதவி மத்தியநிலையத்தின் ஊடாக மாவட்டத்திற்கு ஏற்ப, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களும் மேன்முறையீடுகளும். ....... 36

நிறைவும் பரிந்துரைகளும் ........ 40

தொடர்புடைய ஆதாரங்கள் ........ 42

# முன்னுரை

கடந்த தசாப்தங்களை பின்னோக்கிப் பார்க்கையில், இலங்கைக்கு மிகத் தேவையாகக் காணப்பட்ட சில புதிய சட்டங்கள் எமது சட்டக் கட்டமைப்பிற்குள் உள்ளடக்கப்பட்டன. நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கிக் கொள்வதற்காக அர்ப்பணிப்புச் செய்த சிவில் சமூக இயக்கங்களுக்கும், 2015-2018 நல்லாட்சி அரசாங்கத்திற்கும் அதன் கௌரவம் உரித்தாக வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட 19வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் 18வது அரசியலமைப்புத் திருத்தத்தால் அதிகாரமிழக்கச் செய்யப்பட்டிருந்த சுயாதீனக் குழுக்களின் பொறிமுறையை மீண்டும் வலுப்படுத்தவும், அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை தகவலுக்கான உரிமை 14(அ) 2015ம் ஆண்டிலிருந்து அடிப்படை உரிமைகளுக்கிடையில் சேர்த்துக் கொள்ள முடிந்ததை வெற்றியாகக் கருத முடியும்.

அது தவிர, நல்லாட்சி அரசாங்கத்தின் போது மேலும் பல சட்டங்களை எமது சட்டக் கட்டமைப்பிற்குள் சேர்த்துக் கொள்ள முடிந்தது. அவற்றுக்கிடையே கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் எமது சட்டக் கட்டமைப்பில் சேர்ந்து கொண்டு காரணத்தால் குறிப்பிடத்தக்க அளவில் சமூகத்தின் அவதானத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

1. குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான 2015ம் ஆண்டின் 04ம் இலக்கச் சட்டம்
2. 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்
3. 2016ம் ஆண்டின் 14ம் இலக்க காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டம்
4. 2017ம் ஆண்டின் 26ம் இலக்க நீதிமன்ற அமைப்புகள் (திருத்த) சட்டம்
5. 2018ம் ஆண்டின் 05ம் இலக்க பலவந்தமாக காணாமல் ஆக்கப்படும் அனைத்து நபர்களையும் பாதுகாக்கும் சர்வதேச சமவாயச் சட்டம்
6. 2018ம் ஆண்டின் 34ம் இழக்க இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டம்

மேலே குறிப்பிடப்பட்ட புதிய சட்டங்களுக்கிடையில் புகழ்பெற்ற, ஏனைய சட்டங்களுடன் ஒப்பிடுகையில் நாட்டு மக்களின் தொடர்ச்சியான பாவனைக்கு பழகி வரும் பயன்தரக் கூடிய சட்டமாக 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகலுக்கான சட்டத்தைக் குறிப்பிட முடியும். பிரசைகள் இந்த சட்டத்தின் கீழ் தகவல்களைக் போரப் பழகிய காரணத்தால், அதனோடு தொடர்புடைய துறைகளில் காணப்படுகின்ற மோசடிகள், முறைகேடுகள், ஆரம்பத்திலிருந்தே குறிப்பிட்ட சதவீதத்தால் குறைந்து காணப்படுவதாக எம்மிடம் அறிக்கையிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவிலும் தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதும் ஏற்புடைய கால எல்லைக்குள் அவரால் விண்ணப்பதாரருக்கு பதில் வழங்கப்படுவதன் காரணத்தால் இச் செயற்பாட்டில் கணிசமான அளவு முன்னேற்றம் இப்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

அவ்வாறே, ஒருபோதும் தகவலொன்றைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்த, குறிப்பாகப் பாராளுமன்றம், பொலிஸ், சிறைச்சாலை, சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற நிறுவனங்களிலிருந்தும் கூட தகவல்களைக் கோருவதற்கு மக்கள் தூ ண்டப்படுவதை இச்சட்டத்திலுள்ள சிறப்பம்சமாகக் கருத முடியும். பிரசைகள் சரியான தகவல்கள் மீது செயற்படுதல், நாட்டின் அபிவிருத்திக்கும்

மனித உரிமைகள் உள்ளிட்ட சனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஏதுவாவதுடன், அதிலிருந்து ஆரோக்கியமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பின்புலம் உருவாக்கப்படும் என்பது எமது நம்பிக்கை.

குறிப்பாக சிவில் அமைப்புகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட மனித உரிமைப் பாதுகாவலர்கள் இது தொடர்பில் காட்டுகின்ற ஆர்வம், அவர்களால் இச்சட்டம் தொடர்பில் வழங்கப்படும் புரிந்துணர்வும் பிரச்சாரமும் ஏற்புடைய பாதிக்கப்பட்டவர்களை இச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி அவர்களுக்கு அளிக்கப்படும் சேவையும் இல்லாதிருக்குமாயின் இந்தளவு வெற்றியை அடைய முடியாமற் போயிருக்கலாம்.

அவ்வாறே இது பற்றிய பாரிய புரிதல் மற்றும் அர்ப்பணிப்புடன் ஆணையாளர்கள் தகவலுக்கான ஆணைக்குழுவில் நியமிக்கப்படுவதும், அவர்களின் பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் இச் செயற்பாடு மேலும் வலுப்பெறுவதற்குப் பிரதான காரணமாக அமைந்தது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

தகவலுககான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் 128 நாடுகளில், எமது தகவலுக்கான சட்டத்தின் தரரீதியாகப் பார்க்கின்ற போது நான்காவது உயர்ந்த இடத்தில் இருப்பதாகவும் அறிக்கையிடப்படுகின்றது. அது உண்மையாயின், இந்த வலிமையான சட்டத்திலிருந்து நாம் மேலும் குறிப்பிடத்தக்க அளவில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு, இச்சட்டத்தைப் பயன்படுத்துகின்ற மக்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்து இச்சட்டத்தை செயற்படுத்துவதில் தோன்றும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

தகவலுக்கான ஆணைக்குழுவும் அதன் செயற்பாடும் தொடர்பில் புரிதலைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அவ்வாணைக்குழுவுடன் நேரடியாகப் பணியாற்றிய எமது மனித உரிமைப் பாதுகாவலர்களினதும் உயிரோட்டமான அனுபவங்களையும் தொகுத்து எம்முடன் பணியாற்று கின்ற மனித உரிமைப் பாதுகாவலர்களின் பயனுக்காக இவ்வாய்வறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது.

இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்காக பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்த எமது மனித உரிமைகள் முதலுதவி மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர்கள், தகவலுக்கான சட்டத்தைப் பாவித்து அதன் அனுபவங்கை சமூகமயப்படுத்துவதற்காகப் பங்களிப்புச் செய்த அனைவருக்கும், இந்த ஆய்வை மேற்கொண்ட திரு. சுனெத் கஜநாயக்க அவர்களுக்கும் இங்கு எனது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பிலிப் திசாநாயக்க**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
ரைட் டு லை.்.ப் மனித உரிமைகள்
மத்திய நிலையம்

15/06/2023

# அறிமுகம்

ஒரு நாட்டின் நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, அரச அலுவலர்களின் பொறுப்புக்கூறல் போன்ற அத்தியாவசிய சனநாயகப் பெறுமதிகளைப் பாதுகாக்கின்ற காரணத்தால் தகவல் அறியும் உரிமை சனநாயகம் சார்ந்த எண்ணக்கருவிலிருந்து விலக்கப்பட முடியாத உரிமையாக தற்போதைய சூழலில் சுட்டிக்காட்டப்படக் கூடியதாக உள்ளது. 19ம் நுற்றாண்டின் இறுதிப்பகுதியில், உலகத்தின் பல நாடுகளில் இத் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அவர்களின் சட்டக் கட்டமைப்பிற்குள் பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மூலம் பல அர்த்தமுள்ள சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அந்த வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் 2016 ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி சான்றுப்படுத்தப்பட்டு, 2016 ஆகஸ்ட் 5ம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் இரண்டாம் பகுதியில் மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தை இலங்கையின் தகவலுக்கான உரிமையை உறுதிப்படுத்தும் நேர்மறையான சனநாயக ரீதியான நடவடிக்கையாகக் கருத முடியும். ஏனெனில் 19வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இலங்கையின் அரசியலமைப்பின் 14(அ) உறுப்புரை மூலம் தகவல்களை அணுகும் உரிமை அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தப்பட்டு அவ்வுரிமையை அமுல்ப்படுத்துவதன் ஊடாக பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படைத் தன்மையையும் வகைபொறுப்புக் கூறல் தொடர்பான கலாசாரமொன்றையும் வளர்ப்பதன் மூலம் இலங்கையின் பிரசைகள் நல்லாட்சியில் அதிகமாகக் கலந்துகொள்ளக் கூடிய சூழல் அமைய ஏதுவாகும்.

2016ம் ஆண்டு 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தினால் அதனோடு தொடர்புடைய அர்த்தமுள்ள சட்டங்கள் தொடர்ந்தும் விளக்கமான செயல்முறைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன், அவற்றுக்கு ஏற்றவாறு, பிரசைகள் தகவல்களை அணுகுவதற்கும், பகிரங்க அதிகாரிகள் அத் தகவல்களை எவ்வாறு வழங்க வேண்டும் என்பதற்கும் மிகச் சிறந்த வழிகாட்டல் வழங்கப்படுகின்றது. இச் செயற்பாடு கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு குற்றங்குறைகளுடனும் சாதமான அம்சங்களுடனும் செயற்பட்டதுடன் இன்றளவில் அச் செயற்பாட்டின் குற்றங்குறைகள், போக்குகள் மற்றும் செயற்பாட்டின் வினைத்திறனை வளர்ப்பது எப்படி என்பது பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வது காலத்தின் தேவையாகக் காணப்பட்டது. இத் தேவையை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் தகவல் அறியும் பொறிமுறை தொடர்பில் இவ்வாய்வு இடம்பெற்றது. இங்கு முக்கியமாக தகவலுக்கான சட்டத்தின் பின்னணியையும், அப்பொறிமுறையினதும் ஆணைக்குழுவினதும் செயற்பாடு தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. எமது மனித உரிமைகள் முதலுதவி மத்திய நிலையத்தின் பூரண பங்களிப்பு இந்த ஆய்வில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

8 மாவட்டங்களில் பரவலாகக் காணப்படும் மனித உரிமைகள் முதலுதவி மத்திய நிலையத்தின் ஊடாகப் பல்வேறு பகிரங்க அதிகாரசபைகளிடம் கோரிய தகவல் விண்ணப்பங்களின் மீதான தகவலறியும் பொறிமுறையின் செயற்பாடு, வினைத்திறன், அரச அலுவலர்களின் விழிப்புணர்வு, பொறிமுறையின் நடைமுறைச் சிக்கல்கள், பிரசைகளின் விழிப்புணர்வு மற்றும் தற்கால சாதகமான அம்சங்கள் இங்கே தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அதனூடாக தகவலுக்கான பொறிமுறையில், நடைமுறைப் பாவனையை வளர்ப்பதும், குறைபாடுகளைக் குறைத்துக் கொள்வதும், பிரசைகளின் விழிப்புணர்வையும். புரிந்துணர்வையும் மேம்படுத்துவதும், தகவலுக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அரச

அலுவலர்களின் அவதானத்தையும் புரிதலையும் உயர்த்துவதற்காக ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிப்பதும் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## ஆய்வின் நோக்கம்

2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள செயன்முறையின் தற்போதைய செயற்பாட்டைப் பகுப்பாய்வதும் ஆய்வு செய்வதும், குறைபாடுகளை இனங்கண்டு, தகவலுக்கான உரிமையை வலுப்படுத்துவதே இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாகும். அவ்வாறே இனங்காணப்பட்ட சாதகமான அம்சங்களை மதித்தல், தகவல்களை விண்ணப்பிக்கின்ற போது பிரசைகள் முகங்கொடுக்க நேரும் நடைமுறைச் சிக்கல்களைத் தோற்றுவித்தலும் தகவலுக்கான பொறிமுறையில் ஈடுபட்டுள்ள பகிரங்க அதிகாரசபைகளின் அலுவலர்களின் புரிதல் மற்றும் விழிப்புணர்வு பற்றிய விடயங்கள் ஆய்வு செய்யப்பட எதிர்பார்க்கப்படுகின்றன.

## ஆய்வின் வரையறைகள்

இங்கு எம்மால் தகவல் விண்ணப்பங்கள் பகிரங்க அதிகாரசபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் பெறுபேறுகள் எவையென ஆய்வு செய்யப்பட்ட அதேவேளை, தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட செயற்றிறன் அறிக்கைகளின் தரவுகளும் இரண்டாம் நிலை தரவுகளாக பகுப்பாய்விற்காகப் பயன்படுத்தப்பட்டன. இதற்கேற்ப, இந்த ஆய்வில் வெறுமனே பகிரங்க அதிகாரசபைகள் ஆரம்ப கட்டத்தில் செயற்படுகின்ற விதம் ஆய்வு செய்யப்பட்டதுடன், முதன் முறை தகவல் விண்ணப்பிக்கப்பட்டதிலிருந்து அதன் பின்னர் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடுகளை சமர்ப்பித்தல் மற்றும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்யும் செயல்முறை வரையிலும் இவ்வாய்வு விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஆய்வினை மேற்கொள்ளும் போது எமது மனித உரிமைகள் முதலுதவி மத்திய நிலையத்தின் ஊடாகத் தகவலுக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட சில தரப்புகளிடமிருந்து அத் தகவல் விண்ணப்பங்களின் தற்போதைய நிலையை விசாரித்தறிய எமது மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களால் தொடர்புகளை ஏற்படுத்த இயலதிருந்தது, நாம் முகங் கொடுத்த பிரதான சிக்கலாகும். அதனூடாக சில தகவலுக்கான விண்ணப்பங்களின் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ள எம்மால் முடியாமற் போனது.

அவ்வாறே தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் 2022 ஜனவரி மாதத்திலிருந்து 2023 பெப்ரவரி மாதம் வரையான முறைப்பாடுகள், மேன்முறையீடுகள், விசாரணைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் தகவலுக்கான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தாலும், அதற்கு இதுவரை எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. அதன் பின்னர், தகவலறியும் செயல்முறைகளுக்கு ஏற்றவாறு ஆணைக்குழுவின் பெயர் குறித்த அலுவலரிடம் மேன்முறையீடொன்றைச் செய்திருந்தாலும், அதற்கும் இதுவரை எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. அதனால் ஆய்வில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் செயற்றிறன் அறிக்கை மற்றும் ஆணைக்குழுவின் இணையத் தளத்திலுள்ள ஏனைய ஆவணங்களின் மீது நாம் தங்கியிருக்க நேர்ந்தது.

## ஆய்வின் விதிமுறை

தகவலுக்கான பொறிமுறையில் செயற்பட்ட நபர்களுடன் இடம்பெற்ற நேர்காணல்கள் வாயிலாக சேகரித்துக் கொள்ளப்பட்ட தகவல்கள், ஊடக அறிக்கைகள், தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் அதனோடு தொடர்புள்ள வர்த்தமானி, தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் செயற்றிறன் அறிக்கைகள், செய்திக் கட்டுரைகள், மற்றும் மனித உரிமைகள் முதலுதவி மத்திய நிலையத்தின் ஊடாகத் தகவலுக்கான சட்டத்திற்கு ஏற்ப, பகிரங்க அதிகாரசபைகளிடம் சமர்ப்பித்த தகவலுக்கான விண்ணப்பத்தின் ஊடாகப் பெற்றுக் கொண்ட தகவல்களைத் திரட்டி அவற்றை

விரிவான அறிக்கையொன்றில் தொகுத்து, அதன் பின்னர் அதனை பகுப்பாய்வு செய்வதே இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட விதிமுறையாகும். இதிலே ஆரம்பத் தகவல்களாக, நேர்காணல்களும், மொனராகலை, மாத்தறை, காலி, புத்தளம், கம்பஹா, குருணாகல், திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் முழுவதுமாகப் பரந்து காணப்படுகின்ற மனித உரிமைகள் முதலுதவிகள் மத்தியநிலையத்தின் ஊடாக மக்கள் பகிரங்க அதிகாரசபைகளுக்கு 2022 மே மாதத்திலிருந்து 2023 பெப்ரவரி வரை சமர்ப்பித்த 75 தகவலுக்கான விண்ணப்பங்கள் இந்த ஆய்வில் முக்கியமானவையாக கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே இந்த அறிக்கையில் கண்டுபிடிப்புகளை சமாப்பிப்பதற்காக செய்திக் கட்டுரைகள் ஊடக அறிக்கை, தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் செயற்றிறன் அறிக்கை மற்றும் வேறு ஆவணங்களின் இரண்டாம் நிலைத் தரவுகள் மீது நம்பிக்கை வைக்கப்பட்டது.

இவ்வாய்வு, வெறுமனே 2016ம் ஆண்டின் 12ம் இலக்கத் தகவலுக்கான உரிமைச் சட்டத்தால் காட்டப்பட்டுள்ள செயல்முறையை ஆய்வு செய்தல், ஆணைக்குழுவின் விசாரணைகள், பரிந்துரைகள் மற்றும் செயற்பாட்டின் குறைபாடுகளை இனங்காண்பதைப் போன்றே பிரசைகளின் விழிப்புணர்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வேயன்றி, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் அர்த்தமுள்ள சட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆயவு அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

# தகவலுக்கான சட்டத்தின் பயணப் பாதை

தகவலுக்கான உரிமை பற்றிப் பேசும் போது அதன் வரலாறு இற்றைக்கு சில நூற்றாண்டுகள் பின்னோக்கிப் பயணிக்கின்றது. இலங்கையில் சட்டமொன்றின் மூலம் இது தாபிக்கப்பட்டு சுமார் 6 வருடங்கள் வரையிலான குறுகிய காலமாக இருந்தாலும் அது முதலில் 1766ம் ஆண்டில் சுவீடனில் தான் ஆரம்பிக்கப்பட்டது. 1766ம் ஆண்டில் சட்டமயமாக்கப்பட்ட அந்த அச்சட்டம் 'Freedom of Press Act' எனவே அழைக்கப்பட்டது. 250 வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றை உடைய தகவலுக்கான உரிமை சட்டம் இப்போது நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான நாடுகளில் அமுலில் உள்ளதுடன். 1966ல் ஐக்கிய அமெரிக்கா 1978லும், பிரான்ஸ் 1980லும் நெதர்லாந்து 1982லும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து 1983லும் கனடா 1985லும் டென்மார்க் 2001லும் பாகிஸ்தான் 2005லும் இந்தியா 2007லும் நேபாளம் 2009லும் பங்களாதேஷ், மாலைதீவு, மற்றும் பூட்டான் போன்ற நாடுகளிலும் அமுலுக்கு வர ஆரம்பித்தது. அந்த வகையில், இலங்கையும் தகவலுக்கான சட்டத்தை நிறைவேற்றிய 113வது நாடாகப் பட்டியலில் 2016ன் இறுதிப் பகுதியில் இடம்பிடிக்கின்றது.1 இது உலகத்தின் சனநாயகத்தைச் சுட்டிக் காட்டும் ஒரு பிரதான காரணியாகக் காணப்படும் அதேவேளை அண்டை நாடான இந்தியாவில் இத் தகவலுக்கான உரிமைச் சட்டம் செயற்படுவதன் ஊடாக ஓரளவு கவனமும் தாக்கமும் இலங்கை மீது விடுக்கப்பட்டிருந்தாலும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் வரைபு கூட பாராளுமன்றத்தில் 2016ல் தான் சமர்ப்பிக்கப்பட்டது.

தகவலுக்கான உரிமை தொடர்பில் இலங்கையில் முன்னர் காணப்பட்ட சட்டரீதியான நிலைமையைக் கவனத்திற் கொள்ளும் போது, எமது நாட்டில் காணப்பட்ட தகவல்கள் மறைத்து வைக்கும் அடிப்படைக் கலாசாரத்தைச் சுட்டிக் காட்ட முடியும். இந்த நிலைமை தொடர்பில் அரச இரகசியங்கள் சட்டம், தாபனக் கோவை, அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் செய்திச் சட்டம் போன்ற சட்டங்கள் ஆதிக்கம் செலுத்தின. அச் சட்ட ஒழுங்குவிதிகள் உடாக மக்கள் அரச தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை மட்டுப்பட்டது என்பது அனைவரும் அறிந்த விடயம். எனினும் பிந்திய காலத்தில், தகவலுக்கான உரிமையை ஊக்குவிக்கும் சில சட்டங்களைக் காண முடிகின்றது. அவையாவன, 1975ம் ஆண்டின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை வெளியிடும் சட்டம், அரசியலமைப்பின் ஓதுக்கீடுகள் மற்றும் வழக்குத் தீர்வுகள் என்பவையாகும். அவ்வாறான பல வழக்குத் தீர்ப்புகளின் ஊடாகத் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையானது கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்திற்குள் உள்ளடங்குகின்றது என உயர்நீதிமன்றம் சில சந்தர்ப்பங்களில் அறிவித்துள்ளது.

சட்டம் தொடர்பான முதலாவது ஆவணத்தை 1994ல் கண்டுபிடிக்க முடிந்தது. சுற்றுலாத் தகவல்கள் மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் திரு. தர்மசிரி சேனாநாயக்க அவர்கள் 1994ல் அரச ஊடகக் கொள்கை என்ற பெயரில் அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தார். அதன் இரண்டாவது வாசகம் தகவல் அறியும் உரிமையை ஏற்றுக் கொள்ளுவது தொடர்பில் அமைந்திருந்ததுடன், அதற்கான சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்குவதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், இலங்கை சட்ட ஆணைக்குழு 1996ல் தகவலுக்கான அணுகல் பற்றிய சட்டமூலத்தைச் சமர்ப்பித்தது.[2]

அவ்வாறே, தகவல் அறியும் உரிமை அடிப்படை உரிமைகளின் கீழ் அரசியலமைப்புச் சட்டமூலமாக

[1] https://yukthiya.lk/9958-2/

[2] https://rti.gov.lk/rti-unit/

2002ல் தயாரிக்கப்பட்டு, அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது பாராளுமன்றம் வரை வருவதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை. அந்த எத்தனிப்பு அந்த சந்தர்ப்பத்தில் வெற்றியடைந்திருந்தால், தகவலுக்கான உரிமைச் சட்டமொன்றைத் தாபித்த முதலாவது தெற்காசிய நாடாக இலங்கைதான் இருந்திருக்கும். அதன் பின்னரும் பலமுறை பல்வேறு தரப்பினர் இத்தேவையைத் தோற்றுவித்தனர். அதற்கிடையே, பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பவற்றால் தகவல் அறிதல் தொடர்பான சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 2004ல் அமைச்சரவை சட்டமொன்றை அங்கீகரித்தது. நீதியமைச்சு சில திருத்தங்களுடன் இறுதிச் சட்ட மூலத்தை சமர்ப்பித்த போதும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் சட்டமூலம் தொடர்பான செயற்பபாடு முடிவடைந்தது.

மீண்டும் 2006ல் இலங்கை சட்ட ஆணைக்குழுவால் இரண்டாவது முறையாகவும் தகவலுக்கான சட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதிலே சனநாயகத்திற்காக மக்கள் பங்கேற்பொன்றை ஏற்படுத்துவதற்காகத் தகவலுக்கான சட்டத்தை சட்டரீதியாக நிறைவேற்ற வேண்டும் என அவர்கள் பரிந்துரைத்தனர். அவ்வாறே திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான உடன்படிக்கை மற்றும் ஊழல் தடுப்பு உடன்படிக்கை எனப்படும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இரண்டு உடன்படிக்கைகளில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது என்பதால், அவ்வாறான செயற்பாடொன்றின் அவசியத்தை அவர்கள் குறிப்பிட்டனர்.[3] எவ்வாறாயினும், இத்தகவல்களைத் தெரிந்து கொள்ளும் உரிமைகளுக்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தாலும், அம்முயற்சிகளின் ஊடாக இறுதியில் தகவலுக்கான உரிமை 1978ம் ஆண்டுக்கான அரசியலமைப்பில் 2015ல் 19வது திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கேற்ப, இலங்கையின் அரசியலமைப்பில் 14(அ) உறுப்புரையின் மூலம் தகவல்களை அணுகுவதற்கான உரிமை அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

3 https://rti.gov.lk/rti-unit/

பல்வேறு திருத்தங்களின் பின்னர் 2016 ஜூன் 24ம் திகதி தகவலுக்கான உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதுடன், அது 2016 ஆகஸ்ட் 05ம் திகதி இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் இரண்டாம் பகுதியில் மேலதிகமாக 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டமாக பிரசுரிக்கப்பட்டது. இச்சட்டம் உலகின் தகவலுக்கான சட்டங்கள் தொடர்பான சட்டங்களில் மிக உயர்ந்த தரத்தைக் உரித்தாக்கிக் கொண்டுள்ளது.

20வது அரசியலமைப்புத் திருத்தம்[4] மூலம் அதுவரை காணப்பட்ட அரசியலமைப்புச் சபை இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பாராளுமன்ற சபை தாபிக்கப்பட்டதன் காரணமாக தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை மீது தாக்கம் விடுக்கப்படுவதற்கு இடமேற்பட்டது. அதுவரை அவ்வாறான நியமனங்களுக்கு அரசியலமைப்பு சபையின் பரிந்துரைகள் அவசியமாக இருந்த போதும், 20வது திருத்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட பாராளுமன்ற சபைக்கு வெறுமனே கண்காணிக்கின்ற அதிகாரம் மட்டும் வழங்கப்பட்டிருந்தது. இங்கு அந்நியமனங்களுக்கான கண்காணிப்புகளைப் பெற்றுக் கொண்டாலும் அக் கண்காணிப்புகளை கட்டாயமாக நியமனங்களுடன் ஏற்புடையதாக்குவதில் ஜனாதிபதி கடப்பாடுடையவர் அல்ல. அங்கு ஆணையாளர்களை நியமிப்பதற்காக ஜனாதிபதியின் தற்றுணிபு ரீதியான அதிகாரம் இருப்பதாகவும் சுயாதீனமாகவும் தகைமையுடைய ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்ற கேள்வி எழுந்திருந்த போதும், அதன் நிலைமை 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான சட்டத்திலுள்ள சிறப்பம்சம் காரணமாக ஓரளவுக்கு சுமுகமானது. அதாவது குறித்த அத் தகவலுக்கான சட்டத்தின் 12ம் வாசகத்தில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்கள் அவ்வாசகத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்புகள் அல்லது அமைப்பு வகைகளால் பெயர் குறிக்கப்பட்ட பிரதிநிதிகள் என விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதே அதன்

4 20வது அரசியலமைப்புத் திருத்தம; https://www.parliament.lk/uploads/acts/gbills/sinhala/6176.pdf

சிறப்பம்சமாகும். அதாவது அத்தகவலுக்கான சட்டத்தின் 12ம் வாசகத்தில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்கள் குறித்த அவ்வாசகத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்பு அல்லது அமைப்பு வகைகளால் பெயர்குறித்த பிரதிநிதிகள் என விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் 20வது திருத்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தற்போதைய ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பின் பேரில் ஒரு உறுப்பினரே நியமிக்கப்பட்டிருந்தார். தலைவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கீழே கொண்டு வரப்பட்டது ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை மீது அழுத்தங்களைக் கொடுக்கவில்லை எனச் சொல்லிவிட முடியாததுடன், பொதுவாக ஒட்டுமொத்த நிறுவனக் கட்டமைப்பும் 20வது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அழுத்தங்களுக்கு ஆளாதல் தகவலுக்கான பொறிமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மீண்டும் 21வது அரசியலமைப்புத் திருத்தத்தின்[5] ஊடாக சபாநாயகரின் தலைமையில் அரசியலமைப்புச் சபையொன்றை தாபித்தலும் அதனூடாக சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதில் தேர்தல்கள் ஆணைக்குழு தவிர்ந்த ஏனைய அணைத்து ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் பாராளுமன்றத்திற்குப் பதிலளிக்கக் கடப்பாடுடையது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, 19வது திருத்தத்தில் காணப்பட்ட வகையிலேயே ஜனாதிபதியால் அரசியலமைப்புப் பேரவைக்கு விடுக்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி ஆணைக்குழுக்களின் எந்தவொரு பதவிக்கும் ஜனாதிபதியால் எந்தவொரு நபரும் நியமிக்கப்படக் கூடாது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

[5] 21வது அரசியலமைப்புத் திருத்தம் https://www.parliament.lk/files/pdf/constitution-si.pdf

# 2. தகவல்களை அறிவதற்கான உரிமை

உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் மூலமும் ஏனைய உரிமைகளைப் போலவே தகவலுக்கான உரிமை உலக மனித உரிமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனைப் பாதுகாப்பதற்கு அனைத்து அங்கத்துவ நாடுகளும் முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் 19வது வாசகத்தில் கருத்துச் சுதந்திரத்துக்கும் பேச்சுச் சுதந்திரத்துக்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது தலையீடின்றிக் கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும் எவ்வழிவகைகள் மூலமும் எல்லைகளைப் பொருட்படுத்தாமலும் தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும் பெறுவதற்கும் பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்[6] எனக் குறிப்பிடுகின்றது. தகவலுக்கான உரிமை என்பதன் மூலம் பகிரங்க அதிகாரசபைகளிடமிருந்து தகவல்களைக் கோருவதற்கான உரிமை பொருள் கொள்ளப்படுகின்றது. இங்கு பகிரங்க அதிகாரசபைகள் என்பதன் மூலம் சட்டவாக்க நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், மற்றும் நிறுவனங்கள், அரசால் நிருவகிக்கப்படுகின்ற நிறுவனங்கள், பிரதேச மற்றும் மாகாண ரீதியான அதிகாரசபைகளைப் போன்றே நீதியை நிர்வகிப்பதற்காகத் தாபிக்கப்பட்ட அனைத்து நீதிமன்ற மற்றும் தீர்ப்பாயங்களும் பொருள் கொள்ளப்படுகின்றன. அவ்வாறே ஒப்பந்தங்களின் அடிப்படையில் செயற்படுகின்ற தனியார் நிறுவனங்கள், ஒப்பந்தமொன்று, அனுமதிப்பத்திரம் அல்லது பங்குடமை அமைப்பாக அரசுடன் செயலாற்றுகின்ற நிறுவனங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகள், எந்தவொரு எழுத்துமூல சட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட அல்லது அனுமதிப்பத்திரம் பெற்ற அல்லது முழுமையான அல்லது பகுதி அரச அல்லது அரச சார்பற்ற அமைப்பொன்றின் உதவி பெறுகின்ற பொதுச் சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்களும் இந்த வகையைச் சேரும்.[7]

[6] அனைத்துலக மனித உரிமைகள் பிரசகடனம் (UDHR) 1948> 19 ம் வாசகம் https://www.ohchr.org/en/udhr/documents/udhr_translations/eng.pdf

[7] http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=8&Itemid=111&lang=si

# 3. 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்

2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் தகவல்களை அணுகுவதற்கான உரிமை தொடர்பில் ஏற்புடைய ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும், தகவல்களுக்கான பிரவேசம் மறுக்கப்படக் கூடிய காரணங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகவும், தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவை தாபித்தல், தகவல் அலுவலர்களை நியமித்தல் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான செயல்முறைகளை குறிப்பிட்டுக் காட்டுதல் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள், ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும் முன்வைக்கப்பட்ட சட்டமாகும்.

அச்சட்டத்தின் ஆரம்பத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“அரசியலமைப்பு அதன் 14அ என்னும் உறுப்புரையில் தகவலைப் பெற அணுகுதலுக்கான உரிமையை உத்தரவாதம் செய்வதுடன், தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்குப் பயன்கொடுப்பதன் மூலம் பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் பண்பாட்டைப் பேணிவளர்த்து அதன் மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்து நிற்றல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துதல் ஊடாக முழுமையாகப் பங்கேற்கக் கூடியதும் நாட்டின் பொது வாழ்வில் தீவிரமாகப் பங்கேற்கக் கூடியதுமாகவிருக்கும் ஒரு தேவைப்பாடு உளதாதலால், தகவலுக்கான உரிமைச் சட்டம் விதிக்கப்படுகின்றது.”[8]

இந்த சட்டத்திற்கு ஏற்ப, ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபைக்கும் தகவல் அலுவலர் ஒருவர் இருக்க வேண்டும். பகிரங்க அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் விண்ணப்பங்களுக்கு தகவல்களை வழங்குவதற்கு ஏற்புடைய அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவதுதான் அவரது கடமை. அவ்வாறே குறித்தொதுக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரும் இருக்க வேண்டியதுடன், தகவல் அலுவலரின் தீர்வால் அதிருப்திக்கு உள்ளான தகவலுக்கான விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீட்டைக் கருத்திற் கொண்டு உரிய காலத்திற்குள் தகவலுக்கான விண்ணப்பதாரிக்கு தனது தீர்மானத்தை வழங்குவது அவரது கடமையாகும்.

எனினும் இந்த சட்டத்தின் 05வது வாசகத்திற்கு ஏற்றவாறு விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மட்டும் மக்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. அதில் பகிரங்க அக்கறையுடன் தொடர்பற்ற, தனிப்பட்ட தகவல்கள், தேசிய பந்தோபஸ்த்து மற்றும் இராஜதந்திர தொடர்புகளுக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய தகவல்கள், இலங்கையின் பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் தகவல்கள், இரகசியத் தன்மைவாய்ந்த வர்த்தக ரீதியான தகவல்கள், தனிப்பட்ட மருத்துவ அறிக்கைகள், நம்பிக்கை அடிப்படையில் காணப்படுகின்ற இரகசியத் தகவல்கள், நீதிமன்றத்தை அவமதிக்கக் கூடிய தகவல்கள், நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மைக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய தகவல்கள், பாராளுமன்ற சிறப்புச் சலுகைகள் அல்லது மாகாண சபைச் சிறப்புச் சலுகைகளுடன் முரண்படும் தகவல்கள், தொடர் விசாரணைகளுக்கு தீங்கிழைக்கக் கூடிய தகவல்களும் தேர்தல்கள் மற்றும் அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பில் தீர்மானிக்கப்படாத தகவல்கள் என்பவை இந்த வகையைச் சேரும்.

எனினும் சட்டத்தின் 5(4)ம் வாசகத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தகவலுக்கான

[8] 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-en-13122018.pdf

கோரிக்கையொன்று, தகவலின் வெளிவிடுகையின் பகிரங்க அக்கறை அதனது வெளிவிடுகையிலிருந்து விளையும் தீங்கை விஞ்சியிருக்குமிடத்து மறுக்கப்படலாகாது. இந்த விதிவிலக்கு 05வது வாசகத்தில் உள்ள அனைத்து விலக்குகளுக்கும் ஏற்புடையதாகும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பகிரங்க அக்கறை என்பது இறுதியாக ஆணைக்குழுவால் வரைவிலக்கணப்படுத்தப்படலாம்.[9]

குறிப்பாக திரு. சாமர சம்பத் அவர்களால் 2018ல் தகவல் விண்ணப்பம் ஒன்றின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துகளையும் பொறுப்புகளையும் வெளியிடுமாறு கோரப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட காரணத்தால், தகவல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த மேன்முறையீட்டில் பாராளுமன்ற சிறப்புச் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை வழங்குதல் மறுக்கப்பட முடியாது எனவும் பகிரங்க அக்கறை அதனை விஞ்சியிருக்குமாயின் பாராளுமன்ற சிறப்புச் சலுகை அல்லது 1975ன் 1ம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளியீட்டுச் சட்டத்தின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வராமல் அத்தகவல்களை வழங்க வேண்டும் எனத் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு அவர்களின் RTI 719/2018[10] மேன்முறையீட்டு உத்தரவில் தீர்மானித்ததுடன் அத்தீர்மானத்திற்கு எதிராக இலங்கை பாராளுமன்றம் தொடுத்த CA/RTI/0004/2021[11] இலக்க மேன்முறையீட்டை மறுத்து ஆணைக்குழுவின் தீர்மானத்தை மேன்முறையீட்டு நீதிமன்றமும் அங்கீகரித்தது. அத் தீர்மானத்தின் மூலம் பகிரங்க அக்கறை முக்கியமானதாயின் தகவல்களை வழங்குவதில் எல்லை வகுக்கப்பட்டுள்ள தகவல்களை வழங்க முடியும் என்பது தெளிவாகின்றது.

[9] மேற்குறிப்பிட்டவை

[10] http://www.rticommission.lk/web/images/pdf/0719-2018/5.-RTIC-Appeal-Documentary-In-Person-Hearing-719-2018--.---.pdf

[11] https://www.rticommission.lk/web/images/pdf/Court_2023/Chamara_Samapath_Vs_SL_Parliament.pdf

# 4. தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

தகவலுக்கான உரிமை பற்றிய பொறிமுறை உரியவாறு செயற்படாவிடில், அல்லது தகவல் அறியும் உரிமையுடன் தொடர்புடைய அரச அலுவலர் பொறிமுறை ஊழல் மிக்கதாயின், ஆட்சியாளர்களும் அரச அலுவலர்களும், தமது முறைகேடுகள் பற்றிய தகவல்களை இலகுவாக மறைத்துக் கொள்ள முடியும். அது பொதுமக்கள் நலனுக்கு நேரடியாகத் தீங்கிழைக்கக் கூடும். அரச அலுவலர்கள் நிறைவேற்றுகின்ற பணிகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மை இல்லாத காரணத்தால், அது பற்றிக் கேள்வி எழுப்பப்படுவதற்கான வாய்ப்பும் மட்டுப்படுகின்றது. இங்கு இந்த 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 11வது வாசகத்திற்கேற்ப, 2017 பெப்ரவரி 03ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவான தகவலுக்கான உரிமை ஆணைக்குவின் இடையீட்டின் ஊடாக ஏதேனுமொரு நிறுவனம் தகவல் வழங்கும் பொறுப்பைத் தவறவிட்டால், மறுத்தால், அல்லது வழங்கப்பட்ட தகவல்களால் தகவல் விண்ணப்பதாரி திருப்தியடையவில்லையாயின், தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் முன்னிலையில் மேன்முறையீடு செய்யும் உரிமை பிரசைக்கு உள்ளது. அதற்கேற்ப, பிரசைக்கு உரிய முறையில் தகவல்களை வழங்குவதற்கான முக்கியமான பணி, தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவால் நிறைவேற்றப்படுகின்றது.

## நோக்கு

தகவலறியும் உரிமையை இலங்கை பிரசைகள் வினைத்திறனுடன் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தல்.

## பணிநோக்கு

வெளிப்படைத் தன்மை மற்றும் நல்லாட்சியுடன் இணைந்ததாக அனைத்து அரச அதிகாரிகளினதும் செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் செயல்விளைவுடன் நீதியின் முன் கொண்டு செல்லுதல் ஊடாகவும், பிரசைகள் தமக்குத் தேவையான தகவல்களை அறிந்துகொள்ளக் கூடிய சூழலை உருவாக்குவதன் மூலம் இலங்கை பிரசைகள் அனைவருக்கும் தகவல் அறியும் உரிமையை உறுதி செய்தல்.

## குறிக்கோள்கள்

- வேண்டுகோள்களை செயன்முறைப்படுத்துவதற்கு இயலச் செய்யும் ஏற்பாடுகளை ஊக்குவித்தல்: மேன்முறையீடுகள் தொடர்பாக ஒழுங்குகளை உருவாக்குதல், விசாரணைச் செயன்முறைகள், தகவல் வழங்குவதற்கான கட்டண அட்டவணை மற்றும் அறிக்கை வடிவொழுங்குகள், தகவலறியும் உரிமை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு விளைவு கொடுக்கும் நோக்கத்திற்காக பணிப்புரைகளையும் வழிகாட்டுதல்களையும் பிரசுரித்தல், ஊடக அமைச்சால் முன்மொழியப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான மதியுரை, ஆணைக்குழுவின் மேலோட்டப்பார்வை மற்றும் தீர்ப்பு வழங்கல் வகிபங்கை பகிரங்கப்படுத்தல்.
- செயல்விளைவுடைய தீர்ப்பு வழங்கல் மற்றும் அமுல்படுத்தல்: அரசாங்க அதிகாரிகளுக்கும் தகவல் கோருவோருக்கும் இடையிலான பிணக்குகளில் வினைத்திறனுடன் தீர்ப்பு வழங்கல்.
- அரச உத்தியோகத்தர்களின் பயிற்சிகளுக்கு ஆதரவு வழங்குதல்: அரச உத்தியோகத்தர்களின் பயிற்சியில் கூட்டுழைப்பு, மற்றும் பங்காண்மையாளர்களுக்கான தகவல் அறியும்

உரிமை மீதான விசேடித்த பயிற்சிகளில் ஆதரவளித்தல்.

- பொது விழிப்புணர்வை அதிகரித்தல்: ஆணைக்குழுவின் இணையத்தளம் மற்றும் ஏனைய ஊடகங்கள் ஊடாக தகவலறியும் உரிமைசட்டத்தினை குறித்து பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரித்தல்.
- ஆவண முகாமைத்துவத்தை முன்னேற்றுதல்: வழிகாட்டுதல்களின் வழியாக தகவல்கள் முகாமைத்துவம் மீதான நுணுக்கமான பணிப்புக்களை வழங்குதல்
- துடிப்பான செயற்பாட்டு வெளிப்படுத்துகையை அதிகரித்தல்: வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம்தகவல் வெளிப்படுத்துகையின் துடிப்பான செயற்பாட்டை வளர்த்துக்கொள்ளல், குறைந்தபட்ச நியமங்களை விதித்தல், தற்போதைய சட்டங்களுக்கு மீளமைப்புக்களையும் காலத்திற்கேற்ப மதிப்பீட்டு அறிக்கைகளையும் வழங்கல்
- செயல்விளைவுடைய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையை நிறுவுதல்: பொருத்தமான இணையவழி தீர்வுகள் மற்றும் மதிப்பீட்டுக் கருவிகளை பயன்படுத்துவதன் ஊடாக அரச அதிகாரிகள் தகவலறியும் உரிமையை அமுல்படுத்துவதன் செயல்விளைவை கண்காணித்தலும் மதிப்பீட்டை மேற்கொள்ளலும்.

(ஆதாரம் - தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் இணையத் தளத்திலிருந்து)

தகவலுக்கான உரிமை ஆணைக்குழு 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவாகும். அது பிரதானமாக இவ்வுரிமைகளை கண்காணிக்கின்றதும் அமுல்படுத்தகின்றதுமான நிறுவனமாகும். ஆணைக்குழுவின் மூலம் மேலும் பயனுள்ள தீர்ப்புகளை வழங்குவது, அவற்றை அமுல்படுத்துவது, பகிரங்க அதிகாரசபைகளுக்கு எதிரான வழக்குகளைத் தொடுப்பது, அரச அலுவலர்களின் பயிற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது, பொது மக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பது, ஆணைக்குழுவின் இணையத் தள மற்றும் ஊடக இடைச் செயற்பாடுகளின் ஊடாக தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பில் பொது மக்களின் விழிப்புணர்வை அதிகரித்தல், அறிக்கைகளின் முகாமையை மேம்படுத்துதல், துடிப்பான செயற்பாட்டு வெளிப்படுத்துகையை அதிகரித்தல், செயல்விளைவுக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் தொகுதியொன்றைத் தாபித்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றது.

## 4.1 ஆணைக்குழுவின் கடமைகள், பணிகள் மற்றும் தத்துவங்கள்

### 4.1.1 தகவலுக்கான உரிமை ஆணைக்கழுவின் கடமைகளும் பணிகளும். (14ம் வாசகம்)

(அ) பகிரங்கள் அதிகாரசபைகள் மீது இச்சட்டத்தால் இடப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பதும், உரியவாறு இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துவதும்.

(ஆ) ஒரு பொதுத் தன்மையதான அத்துடன் ஏதேனும் ஒரு குறிப்பான பகிரங்க அதிகாரசபைக்குப் பணிக்கப்பட்டதான ஆகிய இரு தன்மைய சீர்திருத்தத்துக்கு விதப்புரைகளைச் செய்துவம்,

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பகிரங்க அதிகாரசபைகளால் வெளிவிடப்படும் தகவலுக்காக அவைகளால் அறவிடப்பட வேண்டிய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு நியாயத்தின் அடிப்படையில் வழிகாட்டி நெறிகளை வழங்குவதும்,

(ஈ) ஒரு கட்டணக் கொடுப்பனவின்றி தகவல் அலுவலரொருவரால் தகவல் வழங்கப்படக் கூடிய சந்தர்ப்பங்களைத் தீர்மானிப்பதும்,

(உ) தகவல் வழங்குதல் தொடர்பில் உயிர்ப்பான வெளிவிடுகைக் கோட்பாடுகள் மீது அடிப்படையான கட்டண அட்டவணையைத் தீர்மானிப்பதும்

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பயனுறு நடைமுறைப்படுத்தல் மீது பகிரங்க

அலுவலர்களுடன் ஒத்துழைப்பதும் அல்லது அவர்களுக்கான பயிற்சிச் செயற்பாடுகளை மேற்கொள்வதும்,

(எ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளையும் அதன்கீழ் தனியாளின் உரிமைகளையும் பிரசித்தப்படுத்துவதும்,

(ஏ) பகிரங்க அதிகாரசபைகளுக்கென முறையான பதிவேட்டு முகாமைக்கான வழிகாட்டி நெறிகளை வழங்குதலும்.

### 4.1.2. சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஆணைக்குழுவின் தத்துவங்கள்

1. விசாரணைகளை நடத்துவதும், அதன் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துதல்
2. யாரேனும் ஒரு நபரை விசாரணை செய்வதற்கும் அவ்வாளிடமுள்ள தகவல்களை வழங்குவமாறு அவ்வாளைப் பணித்தல்
3. பகிரங்க அதிகாரசபை வைத்திருக்கும் தகவல்களைப் பரீட்சித்தல்
4. ஏதேனுமொரு குறிப்பிட்ட மாதிரியில் தகவல்களை வழங்குமாறு பகிரங்க அதிகாரசபைக்கு பணித்தல்
5. ஏதேனுமொரு பகிரங்க அதிகாரசபையில் வைத்திருக்கும் தகவல்களை வெளியிடுமாறு பணித்தல்
6. 32ம் வாசகத்திற்கு ஏற்ப இடருறும் ஆளினால், ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டை விசாரணை செய்தலும் தீர்மானித்தலும்
7. குறித்த நேரத்தில் தகவல்கள் கிடைக்காத காரணத்தால் பிரசையொரவரிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணத்தை திருப்பிச் செலுத்துமாறு பணித்தல்.
8. சட்டத்தின் 41வது வாசகத்தின் கீழ் வெகுசன ஊடக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் உருவாக்கப்படும் உத்தரவுகளுக்கான பரிந்துரைகளை சமர்ப்பிதல்.

(ஆதாரம் - 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்)

ஆணைக்குழு ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் அதன் முழு அமர்வுகளை நடத்தும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 1 (3) ம் வாசகத்தின் கீழ் 2017 ஜனவரி 20ம் திகதியுடைய (2002/42)[12] இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை வெளியிடப்பட்டதுடன், 2017 பெப்ரவரி 3ம் திகதி தகவலுக்கான உரிமைக்குள் பிரசைகள் பிரவேசிக்க ஆரம்பித்தனர். தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்கு ஏற்ப, தகவலுக்கான விண்ணப்பமொன்றுக்கு தகவல் அலுவலர் மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரால் வழங்கப்பட்ட பதிலால் இடருறும் எந்தவொரு பிரசையும் உரிய கால எல்லை கடப்பதற்கு முன்னர், ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்ய முடியும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 15வது வாசகத்திற்கு ஏற்ப மேன்முறையீடுகளை விசாரிக்கவும் பரீட்சிக்கவும் ஆணைக்குழுவிற்குத் தத்துவம் உண்டு. சத்தியத்தின்/உறுதியுரையின் மீது ஒரு நபரைப் பரீட்சிக்கும் தத்துவமும் இதில் அடங்குவதுடன் அந்நபரிடம் உள்ள எந்தவொரு தகவலையும் முன்வைப்பது அவசியமாகும். (விடுவிக்கப்பட்ட தகவல்கள் நம்பிக்கையுடன் பரீட்சிக்கப்படும்) சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள விடுவிக்கப்படுதல்களுக்குள் அடங்கும் எனக் கருதப்படுகின்ற தகவல்கள் உள்ளிட்ட பகிரங்க அதிகாரசபையிடம் உள்ள எந்தவொரு தகவலையும் சோதனையிடும் தத்துவம் ஆணைக்குழுவிற்கு உள்ளது. ஆணைக்குழு ஏதேனுமொரு வகையான தகவலை வழங்குவதற்கு மற்றும்/அல்லது பகிரங்க அதிகாரசபையால் பொதுமக்களிடம் மறைக்கப்பட்ட தகவலை வெளியிடுமாறு பணிக்க முடியும். தகவல் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படும் போது பிரசையிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களைத் திருப்பிச் செலுத்துமாறு ஆணைக்குழு பகிரங்க அதிகாரசபையைப் பணிக்க முடியும்.

[12] 2017 ஜனவரி 20ம் திகதிக்கான (2002/42)ம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவிப்பு http://documents.gov.lk/files/egz/2017/1/2002-42_S.pdf

இதன் தொகுப்பைக் கருத்திற் கொள்ளும் போது, அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற தவிசாளரும் 04 உறுப்பினர்களும் உள்ளிட்ட 05 ஆணையாளர்களை இந்த ஆணைக்குழு கொண்டிருக்கும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஊடக அமைப்புகள் மற்றும் ஏனைய சிவில் அமைப்புகளால் குறித்துரைக்கப்பட்ட நபரொருவர் அரசியலமைப்புப் பேரவையால் ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் சமூக வாழ்வில் சிறந்த நிலையைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் அவர்கள் அரசியல் ரீதியான அல்லது ஏதேனும் பகிரங்க அல்லது நீதிசார் அல்லது வேறு இலாபமீட்டுகின்ற பதவியை வகிக்காத நபராக இருக்க வேண்டியதுடன், எந்தவொரு அரசியற் கட்சியுடனும் தொடர்புபடாத, எந்தவொரு இயக்கத்தையும் கொண்டு நடத்தாதவரும் எந்தவொரு உயர்தொழிலையும் புரியாத நபராக இருத்தல் வேண்டும். ஆணைக்குழு உறுப்பினர்கள் எனப்படும் 5 ஆணையாளர்களும் தமது பதவியை வகிப்பர். ஆணைக்குழுவால் அதன் பணிப்பாளர் தலைமையதிபதி, ஏனைய உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் தேவைக்கேற்ப நியமிப்பார்.[13]


இந்த செயல்முறைகளுக்கு ஏற்றவாறு 2016ல் முதலாவது ஆணைக்குழு தவிசாளராக திரு மகிந்த கம்மன்பில அவர்கள் நியமிக்கப்பட்டதுடன், ஏனைய ஆணையாளர்களாக ஓய்வுபெற்ற நீதிபதி திருமதி. ரோஹினி வல்கம, சிரேஸ்ட சட்டத்தரணி திருமதி. கிறிஷாலி பிரின்டோ ஜயவர்தன, சட்டத்தரணி திரு. எஸ்.ஜி.புஞ்சிஹேவா மற்றும் பேராசிரியர் திரு. செல்வி திருச்சந்திரன் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். 2021ல் நியமிக்கப்பட்ட தற்போதைய தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் தவிசாளராக ஓய்வுபெற்ற நீதிபதி திரு. உபாலி அபேரத்ன அவர்கள் கடமையாற்றுவதுடன் ஏனைய ஆணையாளர்களாக ஓய்வுபெற்ற நீதிபதி திருமதி. ரோஹினி வல்கம, சிரேஸ்ட சட்டத்தரணி திருமதி. கிறிஷாலி பின்டோ ஜயவர்தன, சிரேஸ்ட சட்டத்தரணி திரு. ஜகத் லியனாரச்சி மற்றும் திரு. மொஹமட் நஹுய்யா ஆகியோர் பணியாற்றுகின்றனர்.[14]

[13] 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-si-13122018.pdf

[14] http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=10&Itemid=141&lang=si

# 5. தகவல் அறிவதற்கான பொறிமுறை

## 5.1 தகவல்களைக் கோருதல்




இலங்கைப் பிரசைகளே தகவலுக்காக விண்ணப்பிக்க முடியும். இங்கு பிரசை எனப்படுவர், ஏதேனும் சட்டவாக்க அல்லது வட்டவாக்கமல்லாத சபையொன்றின் இலங்கை உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கில் மூன்றுக்குக் குறையாமல் காணப்படின் அவ்வாறான சபையும் உள்ளடங்கும்.

| தகவல்களை விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பிக்கின்ற தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய முறை |
|---|---|
| • 2017 பெப்ரவரி மாதம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிகளில் 01வது மாதிரியா கக் காட்டப்பட்டுள்ள விண்ணப்பத்தைப் பயன்படுத்த முடியும். எவ்வாறாயினும் இந்த விண்ணப்பம் கட்டாயமானது அல்ல என்பதுடன் கோரப்படும் தகவல்கள் குறிப் பிடப்பட்ட எழுத்து மூல விண்ணப்பமொன்று போதுமானது.<br>• ஆவ்வாறே சட்டத்தின் 24(6)ம் வாசகம் மற்றும் 2017ம் ஆண்டின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 4வது ஒழுங்குவிதியின் 4வது இடைக்கால உத்தரவின் மூலம் விண்ணப்பதாரி தனக்குத் தேவையான தகவல்களை மின்னஞ்சல் (நு-அயடை) ஊடாக வும் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங் கப்பட்டுள்ளது | • குறிப்புகள், ஆவணங்கள் அல்லது அறிக்கைகளைப் பரிசோதித்தல்.<br>• குறிப்புகள், ஆவணங்கள், சான்றுகளின் பிரதிகள், மேற்கோள்கள், மற்றும் அறிக்கை களைப் பெற்றுக் கொள்ளுதல்<br>• ஏதேனுமொரு பொருளின் சான்றுப்படுத் தப்பட்ட மாதிரியொன்றைப் பெற்றுக் கொள்ளுதல்.<br>• குறுவட்டு, புகைப்படச் சுரள், ஒலிப் பதிவுகள், ஒளிப்பதிவு நாடாக்கள், அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் வடிவத்தி லானதும் கருவிகளால் வாசிக்கப்படக் கூடிய அறிக்கைகள் அல்லது கணினி அறிக்கைகளின் அச்சுப் பிரதிகளாகவும் பெற்றுக் கொள்ளலாம்.<br>• எவ்வாறாயினும் குறிப்புகளை எடுத்துக் கொள்ளுதல், மேற்கோள்களைப் பிரதி யெடுத்தல், கையடக்கத் தொலைபேசி அல்லது கையில் எடுத்துச் செல்லக் கூடிய கமராவின் மூலம் புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளுதல், என்பவற்றுக்கு அனுமதி உரித்தாவதற்கு ஏற்புடைய பகிரங்க அதிகாரசபையின் விருப்பின் அடிப்படையில், தீர்மானிக்கப்படுவதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தகவல்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களை முற்றாகச் செலுத்திய பின்னரே அணுக முடியும். |
| **தகவல் அலுவலர்** | **தகவல் அலுவலரின் பணி** |
| • தகவல் அலுவலர் (ஐமு) யாரேனும் ஒரு நபர் தகவலுக்காக விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில், ஏற்புடைய பகிரங்க அதிகாரசபையால் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக இணைக்கப்பட்டுள்ள அலுவரானவர்.<br>• இங்கு ஏதேனுமொரு பகிரங்க அதிகாரசபையின் தகவல் அலுவலரொருவர் நியமிக்கப்படாத சந்தர்ப்பத்தில் சட்டத்தின் 23வது வாசகத்திற்கேற்ப, தகவல் அலுவலராக அப் பகிரங்க அதிகாரசபை யின் பிரதானி அல்லது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தல் தகவல் அலுவலராகக் கருதப்படுவார். | • தகவல்களைக் கோருகின்ற நபர்களுக்கு ஏற்புடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான பற்றுச் சீட்டொன்றை வழங்குவது அவ்வலுவலரின் அடிப்படை பொறுப்பாகும்.<br>• ஏற்புடைய கோரிக்கையை வாய்மொழி மூலமாக மேற்கொண்டிருப்பின், அதனை ஆவணப்படுத்துதல்.<br>• ஏற்புடைய விண்ணப்பத்திற்கு 14 நாட்களுக்குள் தகவல் வழங்கப்படுமா என்பது பற்றியும், அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய பணத்தொகை என்பவை பற்றியும் அறிவித்தல். அதற்கு நீண்ட காலம் தேவைப்படுமாயின் அதனை தகவலுக்கான விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்.<br>• அங்கு ஒரு நபரின் உயிர் மற்றும் சுதந்திரம் பற்றிய முக்கியமான தகவல்கள் கோரப்பட்டிருப்பின் அதனை உடனடிக் கோரிக்கையாகக் கொள்வதுடன், அவ்வாறான கோரிக்கைகள் மீது 48 மணித்தியாலத்திற்குள் பதில் அளித்தல்.<br>• தகவல் விண்ணப்பங்களுக்கான ஆவணக் கோப்புகளை பேணிச் செல்லுதல் தகவல்களைக் கோருவதற்கு உரிய பதில் அளித்தல், மற்றும் தேவைப்படின் ஏனைய உத்தியோகத்தர்களின் உதவியை நாடுவதும் இதில் அடங்கும். |

(அதாரம்: தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் இணையத்தளம்)

## 5.2 மேன்முறையீட்டு செயல்முறை

இச் செயற்பாட்டின் பின்னர், தகவல் அலுவலர் தகவல்களை வழங்காதிருத்தல் அல்லது வழங்கிய பதிலில் விண்ணப்பதாரி திருப்தியடையவில்லையாயின், அப்பதில் கிடைத்த 14 நாட்களுக்குள் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடொன்றைச் செய்ய முடியும். இங்கு குறித்தொதுக்கப்பட்ட அலுவலர் (DO) என அழைக்கப்படுபவர் பகிரங்க அதிகாரசபையொன்றின் முதலாவது மேன்முறையீட்டு அதிகாரத் தத்துவத்தை வகிப்பதுடன், தகவல் அலுவலரின் பதிலை வெளியிடாதிருப்பின், அல்லது வெளியிட்ட பதில் தொடர்பில் தகவலுக்கான விண்ணப்பதாரி திருப்தியடையாவிடில், அவர் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடொன்றை சமர்ப்பிக்க முடியும்.[15]

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் பகிரங்க அதிகாரசபையால் குறித்தொதுக்கப்பட்ட அலுவலர் ஒருவர் நியமிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவ்வேற்புடைய அரச நிறுவனம் அல்லது திணைக்களத்தின் பிரதானி அந்த நிறுவனத்தின் குறித்தொதுக்கப்பட்ட அலுவலராகக் கருதப்படுவதுடன் அவரிடம் நேரடியாக மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்க முடியும்.

## 5.3 ஆணைக்குழுவிடம் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல்.

இம் மேன்முறையீட்டுச் செயன்முறையில் சட்டம் தீவிரமான மேன்முறையீட்டு செயன் முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அதற்கேற்ப, பகிரங்க அதிகாரசபை குறித்தொதுக்கப்பட்ட அலுவலரொருவரை நியமித்துள்ள சந்தர்ப்பத்தில் முதலாவது மேன்முறையீடு குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாகும். அதன் பின்னர், அதற்குக் கிடைக்கும் பதிலால் தகவலை விண்ணப்பித்தவரால் திருப்தியடைய முடியாவிடில், இரண்டாவது மேன்முறையீடாக தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டை சமர்ப்பிக்க முடியும். மேன்முறையீடொன்றில் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரின் தீர்மானங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவிடம் சட்ட ரீதியான தத்துவம் உள்ளதே இதற்குக் காரணம்.

குறித்தொதுக்கப்பட்ட அலுவலரால் காட்டப்பட்ட அல்லது காட்டப்படாத பிரதிபலிப்புப் பற்றி தகவல் கோரிக்கையை விடுத்த நபர் திருப்தியுறாத சந்தர்ப்பத்திலும் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரின் தீர்மானங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்திலுமே தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டைச் செய்ய முடியும். அங்கு பதில் கிடைத்து அல்லது கிடைக்காமல் போன இரண்டு மாதங்களுக்குள், ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டைச் செய்ய முடியும். ஆணைக்குழுவிற்கு மின்னஞ்சல் ஊடாக மேன்முறையீடொன்றைச் செய்ய முடியாததுடன் RTI விதி 13(2)க்கு ஏற்ப, ஆணைக்குழுவிடம் மேன்முறையீடொன்றை பதிவுத் தபாலில் அல்லது தனிப்பட்ட முறையில் கையளிப்பதன் மூலமாக மட்டுமே மேற்கொள்ள முடியும்.[16]

மேன்முறையீடுகள் கிடைத்த பின்னர், சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் எனத் தோன்றினால் மற்றும் அதன் தேவை காணப்படுமிடத்து ஆணைக்குழு மேன்முறையீடு தொடர்பில் கருத்திற் கொண்டு, சட்டத்தின் விதி இலக்கம் 20க்கு ஏற்ப, இருதரப்பினரையும் அழைத்து, விசாரணைக்கான செயன்முறைக்கு ஏற்றவாறு விசாரித்தல், மற்றும் தீர்மானமெடுத்தல் இடம்பெறும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ், ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்படக் கூடிய படிமுறைகள் சில உள்ளன. அவையாவன, யாரேனும் தகவல் உத்தியோகத்தரொருவர் வேண்டுமென்றே தகவல் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுப்பாராயின் அல்லது கோரிக்கைகளை மறுப்பதற்கான காரணங்களைக் வெளியிடாவிடில்

15 http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=8&Itemid=111&lang=si

16 http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=8&Itemid=111&lang=si

அல்லது மேலதிகமான கட்டணங்களை அறிவிட்டால் அல்லது தகவல் கோரல் செயற்பாட்டில் ஈடுபட மறுத்தால் அது தொடர்பில் ஏற்புடைய பகிரங்க அதிகாரசபையின் அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்புடைய ஒழுக்காற்று அதிகாரசபைக்கு பரிந்துரை செய்யும் தத்துவம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே யாரேனுமொரு குறித்தொதுக்கப்பட்ட அலுவலரொருவர் வேண்டுமென்றே சட்டத்தின் 5ம் வாசகத்திலுள்ள காரணமொன்றைத் தவிர வேறு காரணங்களின் அடிப்படையில் மேன்முறையீட்டை நிராகரிப்பாராயின், அல்லது நியாயமான காரணமேதுமின்றி மேன்முறையீடு கிடைத்து மூன்று வாரங்களுக்குள் அது பற்றிய தீர்மானத்தை எடுக்காவிடில், அவ்வலுவலருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்புடைய ஒழுக்காற்று அதிகாரசபைக்கு பரிந்துரை செய்யும் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இங்கு சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவால் பரீட்சிக்கப்பட்டு தவறு செய்த நபர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் தத்துவங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அங்கு தவறான, முழுமையற்ற மற்றும் குறைபாடுள்ள தகவல்களை வழங்குதல், தகவல்களை அழித்தல், இரத்துச் செய்தல், மாற்றுதல், அல்லது மறைத்தலைப் போன்றே, ஆணைக்குழுவின் முன் தோன்றத் தவறுதல், தகவல்களை வழங்காமல் அல்லது பரீட்சிப்பதை மறுத்தல் அல்லது சத்தியத்தின் மீது போலியான தகவல்களை வழங்குதல் மற்றும் ஆணைக்குழுவால் வழங்கப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்தாதிருத்தல், தடைகளை ஏற்படுத்தல் போன்ற தவறுகளின் அடிப்படையில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அங்கு நீதவான் நீதிமன்றமொன்றில் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு ஆணைக் குழுவிடம் தத்துவம் அளிக்கப்பட்டிருப்பதுடன் அத்தவறு நிரூபிக்கப்படுமிடத்து ஏற்புடைய தவறிழைத்த தரப்பினருக்கு ரூபா ஐம்பதாயிரத்துக்கு (50000.00) மேற்படாத அபராதத்திற்கு அல்லது இரண்டு வருட மறியற் தண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் கீழ்ப்படிய நேரிடும். அதுமட்டுமன்றி, குறித்த அத்தவறிழைத்த தரப்பினருக்கு எதிராக ஏற்புடைய ஒழுக்காற்று அதிகாரசபையால் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படலாம்.[17] தகவல் ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்து, அதனூடாகக் கிடைக்கும் பரிந்துரைகள் மீதும் தகவல் கோரிய நபரால் திருப்தியுற முடியாவிடின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் அத் தீர்மானம் கிடைத்து ஒரு மாத காலத்திற்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அது தொடர்பில் தகவல் கோரும் விண்ணப்பதாரி மேன்முறையீடொன்றைச் செய்ய முடியும்.

---

[17] http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=8&Itemid=111&lang=si

# 6. தகவலுக்கான உரிமையை பகிரங்க அதிகாரசபைகள் தடைசெய்வதும் அத் தடைகளைத் தடுப்பதில் தகவலுக்கான ஆணைக்குழுவின் செயற்பாடும்

தகவலுக்கான சட்டத்திற்கு ஏற்றவாறு எந்தவொரு பகிரங்க அதிகாரசபையிலிருந்தும் பிரசையொருவர் தகவல்களைக் கோர முடிந்தாலும், தகவல்களை மறைத்தலும் தகவல்களை வழங்க மறுப்பதும் தகவலுக்கான உரிமையை உறுதிப்படுத்த முயற்சிக்காதிருப்பதும் பெரும்பாலான அலுவலர்களிடம் காணப்படுகின்ற எதிர்மறைப் போக்காக உள்ளது. சிலவேளைகளில் யாரேனும் ஒரு நபர் சர்ச்சைக்குரிய விடயமொன்று தொடர்பில் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கின்ற போது, அத் தகவல்களைக் கோருகின்ற நபரை இலக்கு வைத்து இந்தத் தகவல்கள் எதற்கென தொலைபேசியில் வினவிய சந்தர்ப்பங்களையும் கடந்த காலங்களில் காண முடிந்தது. எனினும் தகவலுக்கான ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளவாறு தகவல் கோரிக்கையொன்றின் போது, அது ஏன் கோரப்படுகின்றது என்பதை விளக்குவதற்கு தகவல் கோரும் நபர் கடப்பாடுடையவர் அல்ல. அவ்வாறிருக்கையிலும், இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் சாதாரண மக்கள் அச்சத்துக்குள்ளாகி தகவல்களைக் கோராதிருக்கின்ற நிலைக்குத் தள்ளப்படுவது இதிலுள்ள நெருக்கடியான நிலைமையாகும். ஊழல்களுக்கும் மோசடிகளுக்கும் கையசைக்கின்ற அலுவலர்கள் தகவல் கோரல்களை வழங்குவது தொடர்பில் பெரிதாக விருப்பம் தெரிவிப்பதில்லை. தகவலுக்கான சட்டம் காரணமாக கொடுப்பனவு பற்றுறுதிச் சீட்டுகள் தொடங்கி அனைத்துத் தகவல்களையும் பெற்றுக் கொள்ளக் சுடியதாக இருப்பதே அதற்கான காரணம்.

அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் தொடர்பில் அதனோடு முரண்படுகின்ற பல குழுவினர் தமது அனுபவங்களை பல்வேறு வடிவங்களில் முன்வைத்துள்ளனர். அவற்றுக்கிடையே, தகவலறியும் உரிமையைப் பாவித்து 100க்கும் அதிகமான தகவல் விண்ணப்பங்களைப் பல்வேறு பகிரங்க அதிகாரசபைகளிடம் சமர்ப்பித்து தகவல் அறியும் பொறிமுறையின் செயற்பாடு தொடர்பில் ஆய்வு செய்த ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன மற்றும் ஊடகவியலாளர் பிங்குன் மேனக்க கமகே ஆகியோரால் 2018ல் லங்காதீப பத்திரிகையில் தமது அனுபவங்களை கட்டுரையொன்றின் மூலம் பிரசுரித்துள்ளனர். அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்களைத் தழுவி தகவலறியும் பொறிமுறையில் அலுவலர்களின் நடத்தையும் ஆணைக்குழுவின் செயற்பாடும் பற்றிய கருத்தொன்றுக்கு வரமுடியும்.

**புனர்வாழ்வளிக்கப்படும் முன்னாள் எல்.ரி.ரீ.ஈ உறுப்பினர்களின் புள்ளிவிபரமொன்றைக் கோரிய பின்னர் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகப் பிராதானியிடமிருந்து ஒரு அழைப்பு**

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் எல்.ரி.ரீ.ஈ. உறுப்பினர்கள் பற்றிய புள்ளிவிபரத்தைக் கோரி புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்திடம் தகவல் விண்ணப்பமொன்றை சமர்ப்பித்த பின்னர், அதன் பிரதானியால் அழைப்பொன்றை விடுத்து, விண்ணப்பதாரியின் தகவல் விண்ணப்பம் தொடர்பில் விசாரிக்கப்பட்டுள்ளது. இது தகவலுக்கான விண்ணப்பதாரியின் உரிமை மீது விடுக்கப்படும் அழுத்தமும் தகவலுக்கான ஆணைக்குழு உறுதி செய்துள்ள செயன்முறைக்கு ஏற்புடையதல்லாத செயலுமாகும். பாதுகாப்பு அல்லது அதனோடு தொடர்புடைய நிறுவனங்கள் தொடர்பில் காணப்படுகின்ற அனைத்துத் தகவல்களும் தேசிய பந்தோபஸ்துடன் தொடர்புற்றுக் காணப்படுவதால், அவை இரகசியத் தகவல்கள் என்பது பலரது கருத்தாகும். எனினும் அத்தகவல்களில் பெரும்பாலானவை உண்மையாகவே இரகசியத் தகவல்கள் அல்ல. தகவல் அறியும் சட்டத்துடன், அப்பெரும்பான்மைத் தகவல்களை வெளிப்படுத்த

வேண்டியிருப்பினும், அலுவலர்கள் கொண்டுள்ள காலங்கடந்த கருத்துகள் காரணமாக அவற்றை வெளிப்படுத்த அவர்கள் விரும்புவதில்லை. புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்திலும் நடந்தது இதுதான்.

இறுதியில் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தகவல் விண்ணப்பதாரிகளுக்கு தகவலறியும் ஆணைக்குழு வரை செல்ல நேரிட்டது. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் முறைப்பாட்டு விசாரணைகள் அதன் தவிசாளர் மகிந்த கம்மன்பில மற்றும் அதன் உறுப்பினர்களான நீதிபதி ரோஹினி வல்கம, சட்டத்தரணி கிறிஷாலி பின்ட்டோ ஜயவர்தன, சட்டத்தரணி எஸ். ஜி.புஞ்சிஹேவா, கலாநிதி செல்வி திருசந்திரன் மற்றும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க ஆகியோர் முன்னிலை இடம்பெற்றன. புனர்வாழ்வு ஆணையாளர் பணியகத்தின் பிரதானியை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தகவல் அலுவலர் வருகை தந்திருந்தார்.

தகவல்களை வழங்காதிருப்பது தொடர்பில், ஆணைக்குழு விசாரித்த போது, தகவல் அலுவலர், கோரிய தகவல்கள் தேசிய பந்தோபஸ்த்துடன் தொடர்புடையது என்பதால் வழங்க முடியாமற் போனது எனக் குறிப்பிட்டார். இத்தகவற் கோரிக்கையைப் பற்றி ஏற்புடைய நிரல் அமைச்சிடமும் பாதுகாப்பு அமைச்சிடமும் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும், அதற்கான பதில் கிடைக்கவில்லை எனவும், தகவல் அலுவலர் கூறினார். தகவலுக்கான விண்ணப்பதாரியால் கோரப்பட்டிருந்தது புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் எல்.ரி.ரீ.ஈ. உறுப்பினர்கள் பற்றிய புள்ளிவிபரம் என்பதால் அது தேசிய பந்தோபஸ்த்துக்கு எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என விளக்குமாறு ஆணைக்குழு தகவல் அலுவலருக்கு அறிவித்தது.

அதன் பின்னர் தகவல் உத்தியோகத்தர், அத்தகவல்களை வெளியிடுவதால், புனர்வாழ்வளிக் கப்பட்ட எல்.ரி.ரீ.ஈ. உறுப்பினர்களின் தனிப்பட்ட தன்மைக்குப் பங்கம் ஏற்படக் கூடும் என்பதால் அவற்றை வெளியிட தாம் இணங்கவில்லை எனக் குறிப்பிட்டார். சில புள்ளிவிபரங்களை வெளியிடுவதால் அவர்களின் தனிப்பட்ட தன்மைக்கு எவ்வாறு பங்கம் ஏற்படும் என்று விளக்கமளிக்க தகவல் அலுவலரால் இயலவில்லை.

அதற்கேற்ப, தமது உத்தரவைப் பிறப்பித்த தகவலுக்கான உரிமை ஆணைக்குழு தகவல் கோரப்படுவதற்கான காரணத்தை விசாரித்து புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகம் தகவலுக்கான சட்டத்தின் 24ம் வாசகத்தின் ஐந்தாம் உப வாசகத்தின் (ஈ) வாசகத்தை மீறியுள்ளதாகக் குறிப்பிட்டது. அவ்வாசகம் இவ்வாறானது.

“அவரைத் தொடர்பு கொள்வதற்கு அவசியமாக விருக்கக்கூடிய தகவல் தவிர, தகவலைத் தேவைப்படுத்துவதற்கான ஏதேனும் காரணம் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட விபரங்களை கொடுக்கும்படி தேவைப்படுதல் ஆகாது.”[18]

இரண்டு நாள் விசாரணையின் பின்னர் தகவலுக்கான ஆணைக்குழு கோரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களையும் ஆணைக்குழு ஊடாக வழங்குமாறு புனர்வாழ்வு அணையாளர் நாயகப் பணியகத்தைப் பணித்தது.[19] இந்த சம்பவத்தைப் போன்று மேலும் பல சம்பவங்களைக் கடந்த காலங்களில் எம்மால் காண முடிந்தது.

**தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவால் பகிரங்க அதிகாரசபையொன்றுக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் தொடுக்கப்பட்ட முதலாவது வழக்கு.**

2019 பெப்ரவரி 19ம் திகதி சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகக் கலந்துரையாடலில் நிறுவன ரீதியான பால்மாவில் கொழுப்பு தவிர்ந்த வேறு

[18] 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-si-13122018.pdf

[19] https://www.lankadeepa.lk/features/%E0%B6%AD%E0%B6%BB%E0%B6%AD%E0%B6%BB-%E0%B6%AF%E0%B6%B1-%E0%B6%9C%E0%B6%B1%E0%B6%B8-%E0%B6%B4%E0%B6%B1%E0%B6%AD-%E0%B7%84-%E0%B6%AD%E0%B6%9A%E0%B6%9A%E0%B6%A9/2-528842#adahas

எதுவும் உள்ளடங்கவில்லை என உள்நாட்டு பரிசோதனைகளிலிருந்து வெளிவந்துள்ளது என சுகாதார அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் சமூகத்தில் பேசுபொருளொன்று உருவானது. அதன் பின்னர் சுதந்திர சுகாதார சேவைக்கான மக்கள் இயக்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்து மருத்துவர் திரு. நிலான் பிரனாந்து, அவர்களால் நிறுவன ரீதியான பால்மாவில் அடங்கியுள்ள பொருட்கள் தொடர்பில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் 2019.02.07ம் திகதி சுகாதார அமைச்சிடம் தகவலுக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அங்கு மருத்துவரால் அமைச்சிடம் அவ்வூடகக் கலந்துரையாடலில் கூறப்பட்ட நிறுவன ரீதியான பால்மா தொடர்பில் உள்நாட்டு பரிசோதனைகள் எந்த ஆய்வுகூடத்தில் இடம்பெற்றன? எப்போது? யாரால்? மற்றும் அப்பரிசோதனை அறிக்கையின் முழுமையான பிரதியொன்றைத் தருமாறு கோரப்பட்டிருந்தது. எனினும் அக்கோரிக்கைக்கு வழங்கப்பட்ட பதிலாக தகவல் அலுவரால் மேற்குறிப்பிட்ட தகவல்களை வழங்க முடியாது என்ற பதிலே வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் தகவலுக்கான விண்ணப்பதாரியால் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் தமது மேன்முறையீட்டை சமர்ப்பித்த போதும், அதற்கும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. அங்கு அவர்கள் அத்தகவல்கள் மூன்றாம் தரப்பினருக்கு உரிய தகவல்கள் எனவும் அதனால் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 29(2)(ஈ) வாசகத்தின் கீழ் தகவல் வழங்கப்படுவது நிராகரிக்கப்படுகின்றது என்றே குறிப்பிட்டனர். அப்பதிலால் திருப்தியுறாத திரு. நிலான் பிரனாந்து அவர்கள் 2019.07.19ம் திகதி தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடொன்றை சமர்ப்பித்தார்.[20]

அதன் பின்னர் தகவலுக்கான ஆணைக்குழுவின் நீண்ட விசாரணையின் பின்னர், RTI 1720/201921 மேன்முறையீட்டு உத்தரவின் மூலம் 2021.10.21ம் திகதி உடனடியாக ஆணைக்குழுவிற்கும் விண்ணப்பதாரிக்கும் குறித்த அறிக்கையின் பிரதியை வழங்குமாறு பணித்தது. எனினும் சுகாதார அமைச்சினால் ஆணைக்குழு வழங்கிய அப்பரிந்துரையை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளது. அவ்வாறு தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவால் தகவலுக்கான சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவு மற்றும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாதிருந்த காரணத்தால், ஆணைக்குழுவால் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஊ ழே85399.'.01 வழக்கொன்று தொடரப்பட்டது.

அது தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவால் பகிரங்க அதிகாரசபைக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் தொடரப்பட்ட முதலாவது வழக்காகக் கருதப்படுகின்றது. இந்த வழங்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 32(1), 32(3), 39(1) வாசகங்கள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதிவாதிகள் இருவருக்கும் அழைப்பாணை விடுக்குமாறு தகவலுக்கான உரிமைச் சட்டம் சார்பில் முன்வந்த சட்டத்தரணி திருமதி. ஹிமாலி குலரத்ன அவர்கள் விண்ணப்பித்திருந்தார். அதற்கேற்ப, 2023 மார்ச் 21ம் திகதி தமது நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜராகுமாறு அறிவித்து சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் திரு. ஜே.சீ.கம்லத் அவர்களுக்கும் அவ்வமைச்சின் தகவல் உத்தியோகத்தர் திரு. வீ.ரீ.எஸ் சிரிவர்தன அவர்களுக்கும் அழைப்பாணை விடுக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திரு. பிரசன்ன அல்விஸ் பணித்தார். அவ்வாறே இந்த வழங்கின் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.[22]

இந்த சம்பவங்களிலிருந்து தெளிவாகின்ற சில

[20] 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-si-13122018.pdf

[21] மேற்குறிப்பிட்டது

[22] https://divaina.lk/%E0%B6%9A%E0%B7%92%E0%B6%BB%E0%B7%92%E0%B6%B4%E0%B7%92%E0%B6%A7%E0%B7%92-%E0%B6%AD%E0%B7%9C%E0%B6%BB%E0%B6%AD%E0%B7%94%E0%B6%B-B%E0%B7%94-%E0%B6%B1%E0%B7%9C%E0%B6%AF%E0%B7%94%E0%B6%B1%E0%B7%8A/
https://www.rticommission.lk/web/images/pdf/Court_2023/Chamara_Samapath_Vs_SL_Parliament.pdf

விடயங்கள் உள்ளன. அவையாவன,

- தகவல் ஆணைக்குழுவால் தம்மிடமுள்ள தத்துவத்தின் மூலம் பிரசையின் தகவலறியும் உரிமை எந்தளவிற்குப் பாதுகாக்கப்படலாம் என்பது,
- அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த உரிமையை உறுதிப்படுத்துகையில் மந்த கதியிலும் பொறுப்பின்றியும் செயற்படும் தன்மை
- பிரசைக்கு இச்சட்டத்தின் ஊடாகக் கிடைத்துள்ள இவ்வுரிமையின் மூலம் தகவல்களைக் கோரக் கூடிய பகிரங்க அதிகாரசபைகள் மற்றும் அப்பொறிமுறை தொடர்பான பெரும்பான்மைக்கு உரிய புரிந்துணர்வொன்று இல்லாமை என்பதுமாகும்.

ஏனைய கடிதமொன்றைப் போல இத் தகவல் விண்ணப்பம் புறக்கணிக்கக் கூடிய ஒன்று அல்ல என்பதுடன், அது பிரசைகளின் உரிமைகளை உறுதி செய்வதற்காகப் பாவிக்கக் கூடிய பொதுமக்கள் கருவியாகும். இந்தியா அதற்கான சிறந்த உதாரணம். இன்றளவில் இந்தியாவின் RTI என்ற சொல் ஒரு வினைச்சொல்லாகவும் பாவிக்கப்படுவது மட்டுமல்ல அதனூடாக இந்திய பிரசைகள் அதிகபட்ச பயனைப் பெற்றவண்ணம் உள்ளனர். மேலே குறிப்பிட்ட CA/RTI/0004/2021[23] மேன்முறையீட்டு தீர்மானத்திலும் தகவலுக்கான உரிமை தொடர்பில் இந்திய வழக்குச் சட்டத்தின் மீது கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

M.R. Misra Vs. The Supreme Court of India (CIC/SM/A/2011/000237/Secretary General) வழக்குத் தீர்ப்பில் இந்திய சட்டத்தில் தகவல்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஏனைய சட்டங்கள் மற்றும் தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்கிடையே பொருத்தமின்மைகள் ஏற்பட்டால் குறித்த அவ்வனைத்துச் சட்டங்களையும் தாண்டி தகவலுக்கான உரிமைச் சட்டம் அமுல்ப்படுத்தப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**“Where there is any inconsistency in a law as regards furnishing of information, such law shall be superseded by the RTI Act. Insertion of a nonobstante clause in section 22 of the RTI Act was a conscious choice of Parliament to safeguard the citizen’s fundamental right to information… If the PIO has received a request for information under RTI Act, the information shall be provided to the applicant as per the provisions of the RTI Act and any denial of the same must be in accordance with section 8 and 9 of the RTI Act only.”**

இந்தியாவில் இத்தகவலுக்கான சட்டம் மிகவும் நடைமுறை ரீதியாகவும் பயனுள்ளவாறும் பயன்படுகின்ற விதம் காணப்பட்டாலும் இன்னும் இலங்கைப் பிரசைகளுக்கு இச்சட்டம் தொடர்பில் அந்தளவிற்கு விழிப்புணர்வு இல்லை. எனினும் பொறிமுறை பற்றிய அறிவையுடைய நபர்கள் அதன் பலனைப் பெற்றுக் கொள்வதுடன் பலர் அதனை வெறுமனே ஒரு வார்த்தையாக மட்டுமே கருதி சட்டத்திலிருந்து பயனைப் பெறாதிருக்கின்றனர். அதனால் இச்சட்டம் மக்களிடையே பிரபலமாக்கப்படுவது காலத்திற்கேற்ற தேவை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

[23] https://www.rticommission.lk/web/images/pdf/Court_2023/Chamara_Samapath_Vs_SL_Parliament.pdf

# 7. தகவலுக்கான ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளும் செயற்பாடும்

தகவலுக்கான சட்டம் எனப்படுவது நாட்டு மக்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த வரப்பிரசாதமாகும். ஏனெனில் பெரும்பாலான சட்ட ஒழுங்குவிதிகள் பகிரங்க ஆட்சியாளர்களின் விருப்பத்தின் பேரிலும் அவர்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டுமே தயாரிக்கப்பட்டுள்ளன. இன்றளவில் பிரசைகள் தகவல்களை அணுக ஆர்வம் காட்டினாலும் சில பகிரங்க அதிகாரசபைகள் அவர்களின் அதிகாரத் தத்துவத்தைத் தொடர்ச்சியாக தகவலுக்கான உரிமைக்கு மேலே வைத்திருக்க வேண்டும் என விரும்புவதாலேயே தகவல்களை வழங்க நடவடிக்கை எடுக்காதிருக்கின்றனர். அந்த வகையில தகவல்கள் வழங்கப்படுவதைத் தவிர்ப்பார்களாயின், தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவே பிரசையின் தகவல் அறியும் உரிமையைப் பாதுகாக்கும் பாதுகாவலர். எனவே தகவல்களை வழங்காதிருப்பதால் அல்லது போதுமான தகவல்களை வழங்காதிருப்பதால் பெரும்பாலானவர்கள் தகவல் ஆணைக்குழுவின் ஊடாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் சட்டத்தின் சட்டரீதியான தத்துவத்தின் மூலம் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவுமே தமது மேன்முறையீடுகளை பெருமளவில் சமர்ப்பிப்பிக்கின்றார்கள். 2017 பெப்ரவரி 03ம் திகதியிலிருந்து இதுவரை தகவல் ஆணைக்குழுவிடம் பல மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கிடையே ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் மீது பல பகிரங்க அதிகாரசபைகளால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, அதனூடாக மறைந்திருந்த பல மோசடிகள், ஊழல்கள் வெளிவந்ததுடன் இடம்பெறவிருந்த மோசடிகள் தடுக்கப்பட்டன. எனினும் சிற்சில சந்தர்ப்பங்களில் தகவலுக்கான ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படாத சந்தர்ப்பங்களைப் போன்றே அத் தீர்மானங்கள் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் கடந்த காலங்களில் காணக்கிடைத்தன.

அங்கு தகவல் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் சவாலுக்கு உள்ளாக்கப்பட்ட பிரதானமான சில சம்பவங்களைக் காணலாம். அவற்றில் பிரதானமான இரண்டு சம்பவங்கள் இவ்வாய்வில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன.

### ❖ பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் பொறுப்புகளை வெளியிடுமாறு கோருதல்

தகவலுக்கான சட்டம் அமுல்படுத்தப்பட்ட முதல் காலகட்டத்திலிருந்தே அச் செயற்பாட்டுடன் பணியாற்றிய சுதந்திர ஊடகவியலாளர் திரு. சாமர சம்பத் அவர்கள் இந்த ஆய்விற்காக மேற்கொண்ட கருத்துக் கணிப்பொன்றில் கூறப்பட்ட கருத்து பின்வருமாறு. அவரால் 2018ம் ஆண்டில் 'அத' பத்திரிகையின் ஊடகவியலாளராக தகவலுக்கான விண்ணப்பமொன்றின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையைக் கோரிய சம்பவம் இங்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

2018.06.21ம் திகதி, 2010ம் ஆண்டிலிருந்து 2018ம் ஆண்டு வரை பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் பொறுப்புகளுக்கான வெளியீடு பெறப்பட்டுள்ளதா இல்லையா என்பது பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கே இந்த தகவலுக்கான விண்ணப்பம் பாராளுமன்றத்தின் தகவல் அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மக்கள் வாக்குகளால் நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தமது சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான வெளியீட்டை பாராளுமன்றத்திற்கு வழங்க வேண்டியதுடன், அதனைத் தெரிந்து கொள்வது மக்களின் உரிமையாகும். எனினும்

சாமர அவர்களின் தகவல் விண்ணப்பத்திற்குத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க முடியாது என்ற பதிலையே அளித்திருந்தார். கோரப்பட்டுள்ள தகவல்கள் அவர்களிடம் இல்லை என்பதைக் காரணமாகக் கூறியுள்ளனர். எனினும் உறுப்பினர்களின் சொத்துக்கள், பொறுப்புக்கள் அடங்கிய அறிக்கைகள் பாராளுமன்றத்திடம் இருக்க வேண்டும் என்பதால் திரு. சாமர சம்பத் அவர்கள் மீண்டும் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் தனது மேன்முறையீட்டை 2018.08.30ம் திகதி சமர்ப்பித்துள்ளார். குறித்தொதுக்கப்பட்ட அலுவலரும் மேன்முறையீட்டுக்குப் பதிலாக சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தாலும் அத் தகவல்கள் பாராளுமன்றப் பொதுச் செயலாளரின் பொறுப்பில் இல்லாத காரணத்தால், தகவல்களைத் தரமுடியாது என்ற பதிலை வழங்கியுள்ளார். அந்தப் பதிலால் திருப்தியுறாத திரு.சாமர சம்பத் அவர்கள் தகவலுக்கான ஆணைக்குழுவிடம் தமது மேன்முறையீட்டை 2018.09.11ம் திகதி தாம் கோரிய தகவலைச் சரியாகப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே சமர்ப்பித்தார்.

அதன் பின்னர் ஆணைக்குழு இந்த மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுக்கத் தொடங்கியதுடன், இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. அக்காலப் பகுதியில் பல்வேறு வாதவிவாதங்களைக் கொண்டுவந்து தகவல்களை வழங்காதிருக்க பாராளுமன்ற உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்ததுடன் அங்கு தகவல்களை சபாநாயகர்தான் வழங்க வேண்டும் எனவும், பொதுச் செயலாளரால் அதுபற்றித் தீர்மானமெடுக்க முடியாது எனவும் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தனர். அதுமட்டுமன்றி, தகவல்களை வழங்குவதற்கு சட்டமா அதிபரின் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அறிவித்திருந்ததுடன் பின்னர் சட்டமா அதிபர் வழங்கிய அறிவுரைகளுக்கு ஏற்பவும் தகவல்களை வழங்க முடியாது எனவும் தகவலுக்கான ஆணைக்குழுவிடம் அறிவித்துள்ளனர்.

இரண்டு வருட காலமாக விசாரணை செய்யப்பட்டு பின்னர் இத்தகவல்களைக் கோரிய விண்ணப்பதாரி சொத்துக்கள் பொறுப்புக்களை வெளியிட்ட உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலொன்றைக் கோரியிருப்பதால் அது சொத்துக்கள் பொறுப்புக்கள் சட்டத்தின் கீழன்றி தகவலுக்கான சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை என ஆணைக்குழுவால் RTI719/2018[24] மேன்முறையீட்டு உத்தரவொன்றின் மூலம் 2021.02.11ம் திகதி தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப, அங்கு எந்தவொரு உறுப்பினரதும் உரிமையும் மீறப்பட மாட்டாது என்பதால் தகவல்களை விடுவிக்குமாறு ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது. அங்கு தகவலுக்கான ஆணைக்கு தகவல்களை வழங்குவதற்கு 16 பக்கங்களையுடைய தீர்ப்பொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தாலும் பாராளுமன்றத்தால் அத்தகவல்கள் வழங்கப்படுவது மறுக்கப்பட்டுள்ளது. தகவல்களை வழங்குவதற்குப் பதிலாக பாராளுமன்ற பொதுச் செயலாளர் 15 வியடங்களின் கீழ் காரணங்களைக் காட்டி தகவலுக்கான ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட தீர்மானத்தை வலுவற்றதாக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் மேன்முறையீடொன்றை சமர்ப்பித்தார். அதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இது தொடர்பில் நீண்ட விசாரணையின் பின்னர் 2023.02.23ம் திகதி தகவலுக்கான விண்ணப்பதாரிக்கு தகவல்களை வழங்க முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டது. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிரான மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சில வழக்குகள் காணப்பட்டாலும் தீர்மானத்தை வழங்கிய முதலாவது மேன்முறையீடு இது என்பதுடன் அது தகவற் சட்டத்தை வலுப்படுத்தும் வகையிலான வழக்குத் தீர்ப்பாக அமைந்தது. அதிலே உறுப்பினர்கள் பொது மக்களால் பராமரிக்கப்படுவதுடன் அவர்கள் தமது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளியிடுவதற்கு சட்டரீதியான கடப்பாடுடையவர்கள் எனவும், தகவலுக்கான சட்டத்தின் ஏற்பாடுகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்புடையது எனவும் தகவலுக்கான ஆணைக்குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த உறுப்பினர்களும்

[24] http://www.rticommission.lk/web/images/pdf/0719-2018/5.-RTIC-Appeal-Documentary-In-Person-Hearing-719-2018--.---.pdf

சட்டரீதியாகக் கடப்பாடுடையவர்களாக இருக்கின்றார்கள் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப, சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கையை விடுவிக்குமாறு தகவலுக்கான ஆணைக்குழு 2021ம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 02ம் திகதி வழங்கிய பணிப்பில் உறுதிப்படுத்தி பாராளுமன்ற பொதுச் செயலாளரின் மேன்முறையீடு நிராகரிக்கப்படுகின்றது எனவும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.25

திரு. சாமர சம்பத் அவர்கள் 2010ம் ஆண்டிலிருந்து 2018ம் ஆண்டு வரையான தகவல்களைக் கோரியிருந்தாலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு ஏற்ப, 2023ம் ஆண்டு வரையான தகவல்களை பாராளுமன்றம் வெளியிட நேர்ந்துள்ளது. எனினும் திரு. சாமர சம்பத் அவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை வழங்கியிருந்த போதும் இதுவரை தாம் கோரிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்த சம்பவத்தின் மூலம் இன்னமும் அரச பொறிமுறையானது இத் தகவல் சட்டத்தைத் தழுவுவதற்கு முயற்சியேதும் எடுக்காதிருப்பது தெரிய வருகின்றது. அவ்வாறே உத்தியோகத்தர்கள் இன்னமும் ஆணைக்குழுவின் தீர்மானங்களை விட தமது அதிகார பலத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மட்டுமே நடவடிக்கை எடுக்கின்ற விதம் தெரிய வருகின்றது. தகவல் ஆணைக்குழு எந்தளவுக்கு சரியான தீர்வுகளை வழங்கியிருந்தாலும் அதனை செயற்படுத்துவதில் உள்ள சிக்கல் நிலை இதிலிருந்து சிறப்பாகத் தெளிவாகின்றது. அதுமட்டுமன்றி, இயன்றளவு விரைவில் தகவல்களைத் தாம் அண்மிக்கின்ற நோக்கிலேயே நபரொருவர் தகவல் விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்கின்றார். எனினும் இச்சம்பவத்திற்கு ஏற்ப, தகவல் விண்ணப்பதாரி 5 வருடங்கள் காத்துக் கொண்டிருந்தாலும் தம்மால் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போதல் இங்குள்ள பிரதான பிரச்சனையாக உள்ளது.

### ❖ பகிரங்க அதிகாரசபையையும் தகவலுக்கான ஆணைக்குழுவையும் எதிர் மனுதாரர்களாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட தகவலுக்கான ரிட் மனு

தகவலுக்கான ஆணைக்குழுவின் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தால், தகவலுக்கான ஆணைக்குழுவுக்கு எதிராக பிரசைகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னிலையில் மேன்முறையீடுகளைச் செய்த சந்தர்ப்பங்களையும் காண முடிகின்றது. தகவலுக்கான ஆணைக்குழுவிற்கு எதிராக நீதிமன்றத்தில் பிரசையொருவர் தொடர்ந்த முதலாவது வழக்கு இப்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருவதுடன் அது பொலொன்னறுவை பிரதேச நிருபரான திரு. எஸ்.எம் மனோஜ் பிரசன்ன அவர்களால் தொடரப்பட்டுள்ளது.

கரும்பு பயிரிடும் நோக்கில் முப்பது ஆண்டுகளாக யுத்தம் காணப்பட்ட தொப்பிகல மேற்குத் திசையை எல்லையாகக் கொண்டு அமைந்த மாதுறுஓய தெற்குக் கரைப் பிரதேசத்தில் 60,750 ஏக்கர் காணிகள் வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்படுவதற்கு அப்போதிருந்த அரசாங்கம் 2016ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எடுத்த அமைச்சரவை தீர்மானத்திற்கு ஏற்ப, அவ்வபிவிருத்திச் செயற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வந்ததால் இப்பிரதேசத்தில் சேனைப் பயிர்ச்செய்கையின் மூலம் வாழ்க்கையைக் கொண்டு நடத்திய 2,000 குடும்பங்களுக்கும் பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டிருந்த 400 குடும்பங்களும் இழந்த வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் அவ்வாறே, இவ்வபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு நீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த மாதுறுஓய நீர்த்தேக்கத்திலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளும் மாதுறுஓய இடது கரைப் பிரதேசத்தில் 22,000 குடும்பங்களுக்கு நேரும் சுற்றாடற் தாக்கங்கள் காரணமாக இது தொடர்பில் சில பேச்சுகள் எழுந்திருந்தன. இதனால், பொலன்னறுவை பிரதேசத்தில் வசித்த ஊடகவியலாளர் திரு. எஸ். எம்.மனோஜ் பிரசன்ன அவர்களால் தகவலுக்கான சட்டத்தின் கீழ் இந்த கருத்திட்டத்தின்

[25] https://www.rticommission.lk/web/images/pdf/Court_2023/Chamara_Samapath_Vs_SL_Parliament.pdf

கருத்திட்ட ஆலோசகரான இலங்கை மகாவலி அதிகாரசபையிலிருந்து மாதுருஓய தெற்குக் கரை அபிவிருத்தி தொடர்பில் 2017.05.02ம் திகதி தகவல்கள் கோரப்பட்டன.[26]

எனினும் தகவல் உத்தியோகத்தரால் தகவல்கள் வழங்கப்பட்டிருக்காததுடன், அதன் பின்னர் 2017.05.30ம் திகதி குறித்தொதுக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கு எந்தவொரு பதிலும் கிடைக்காததுடன், அதன் பின்னர், அவர் 2017.07.06ம் திகதி தகவலுக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீடொன்றை சமர்ப்பித்துள்ளார். அதன்பின்னர் தகவலுக்கான ஆணைக்குழுவின் நீண்ட விசாரணையின் பின்னர் ஏற்புடைய பகிரங்க அதிகாரசபையினால் தகவலுக்கான விண்ணப்பதாரிக்கு தகவல்களை வழங்க வேண்டும் என RTIC97/2017 மேன்முறையீட்டு உத்தரவின் மூலம் தீர்மானிக்கப்பட்டது.27 எனினும் அவ்வுத்தரவை நடைமுறைப்படுத்தி மகாவலி அதிகாரசபை தகவல்களை விடுவித்திருக்கவில்லை.

அதனால் தகவலுக்கான ஆணைக்குழு தமது தீர்மானத்தை நடைமுறைப்படுத்தத் தவறியதாலும் மகாவலி அதிகாரசபை தகவல்களை வழங்காதிருத்தலும் ஆகிய இரு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவ்விரு நிறுவனங்களுக்கும் எதிராக திரு.மனோஜ் பிரசன்ன அவர்கள் தகவலுக்கான ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபை, சட்டமா அதிபர் உள்ளிட்ட 11 பேரை எதிர் மனுதாரராக்கி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

2021 பெப்ரவரி 19ம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இம் மேன்முறையீட்டு மனுவின் ஒரு எதிர்மனுதாரர் தரப்பான தகவலுக்கான ஆணைக்குழு, மேன்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் மேன்முறையீட்டாளருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்றே மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு தகவலுக்கான ஆணைக்குழு தெரிவித்தது. அது தொடர்பில் மனுதாரர் திருப்தியுறவில்லை எனச் செய்த அறிவித்தலை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டதுடன் இதன் ஏனைய எதிர்மனுதாரரான மகாவலி அதிகாரசபைக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் தோன்றுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேன்முறையீட்டைச் சமர்ப்பித்த திரு. மனோஜ் பிரசன்ன தகவலுக்கான சட்டம் எனப்படுவது எமது நாட்டுப் பிரசைகளுக்குக் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதம் என்றாலும், இன்னமும் பல பகிரங்க அதிகாரசபைகள் உரியவாறு மக்களுக்கு தகவல்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு தகவல்கள் வழங்கப்படுதல் பகிரங்க அதிகாரசபைகளால் தவிர்க்கப்படுமாயின், தகவலுக்கான ஆணைக்குழு மக்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்ள உதவியளிக்க வேண்டும். அதாவது மக்களுக்கு தகவல்களை வழங்குமாறு பகிரங்க அதிகாரசபைகளுக்கு உத்தரவிடுதல், மற்றும் அவற்றை செயற்படுத்தும் வேலைத்திட்டமொன்றை உரியவாறு தயாரித்தல். அதற்கு தகவலுக்கான ஆணைக்குழு சட்டரீதியாகவே கடப்பாடுடையது. எனினும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல், பிரசையொருவர் ஆணைக்குழுவின் முன்னிலையில் செல்கின்றபோது ஆணைக்குழு ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக விசாரணைகளை நடத்துகின்றது. அப்போது தகவலுக்கான உரிமை தொடர்பில் மக்கள் விரக்தியடையக் கூடும். அதுமட்டுமன்றி, தகவலுக்கான ஆணைக்குழு கொழும்பில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், பொலன்னறுவை, அம்பாந்தோட்டை, பிரதேசங்களைச் சேர்ந்த பிரசையொருவருக்கு தகவலுக்கான ஆணைக்குழுவின் வழக்கு விசாரணைகளுக்கு நீண்ட நேரம் செலவழித்து கொழும்புக்கு வர நேர்ந்தால் அவர்களுக்குப் பெரும் செலவைத் தாங்க நேர்கின்றது. இக்காரணங்களின் அடிப்படையில் தகவலுக்கான உரிமையை வலுப்படுத்துவதற்குத் தேவையான

[26] https://medialk.com/archives/4162
[27] http://www.rticommission.lk/web/images/pdf/rticap-peal-097-2017/rtic-97-2017-si-19122018.pdf

உத்தரவொன்றைப் பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் தாம் நீதிமன்றத்திடம் சென்றதாக திரு.மனோஜ் குறிப்பிட்டிருந்தார்.[28]

தகவலுக்கான சட்டத்தை எந்தளவிற்கு நடைமுறை ரீதியாகப் பாவிக்க முடிந்தாலும் சில அரச அலுவலர்களின் தகவலுக்கான சட்டம் பற்றிய புரிதல் மிகக் குறைவானதாகவே உள்ளது. தகவலுக்கான சட்டம் தகவல்களை வழங்காதிருப்பதற்கோ, தகவல்களை மறைப்பதற்கோ ஆனதல்ல என்பதுடன் தகவலுக்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 6 வருட காலம் நிறைவடைந்திருந்தாலும், பெரும்பாலான பகிரங்க உத்தியோகத்தர்களிடையே இன்னமும் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னிருந்த தகவல்களை மறைக்கின்ற அடிப்படைக் கலாசாரமே காணப்படுகின்றது. பெரும்பாலான நிறுவனங்களில் இப்போது உரியவாறு தகவல்கள் வழங்கப்பட்டாலும், சில நிறுவனங்கள் இன்னமும் தகவல்களை வழங்க விருப்பம் தெரிவிக்காதிருப்பதாக மேற்குறிப்பிடப்பட்ட உதாரணங்களிலிருந்தும் தெளிவாகின்றது. தகவலுக்கான ஆணைக்குழுவிடம் வந்து சேருகின்ற மேன்முறையீடுகளைப் பார்க்கின்ற போது அது நன்றாகத் தெளிவாகின்றது. அவ்வாறு வரும் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு நீண்ட காலம் செல்லுதல் அடுத்த பிரதான பிரச்சனையாக இருப்பதுடன், அதற்குப் பிரதான காரணம் அதிகமான மேன்முறையீடுகளின் வருகை அல்ல. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை உரியவாறு அரசாங்கம் வழங்கப்படாதிருப்பதும் அதற்குக் காரணமாகின்றது. தகவலுக்கான சட்டத்தைக் கொண்டு வந்த மாத்திரத்தில் அரசு கையைக் கழுவிக் கொள்ள முடியாது. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் செயற்பாட்டுத் தேவையான நிதி ரீதியான ஒதுக்கீடுகளை உரிய நேரத்தில் ஒதுக்குவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். அவ்வாறே தகவல்களை வழங்கத் தயக்கம் காட்டுகின்ற நிறுவனங்களை இனங்கண்டு, அவற்றின் உத்தியோகத்தர்களை அறிவுறுத்தி தகவலுக்கான சட்டத்தை மிகவும் நடைமுறை ரீதியாகப் பாவிப்பதில் அவர்களைத் ஈடுபடுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதுமட்டுமல்ல தகவல்களை வழங்கும் போது அறவிடப்படும் கட்டணங்களிலும் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதிக பணம் அறிவிடுதல் சாதாரண பிரசைகள் இச் செயற்பாட்டிலிருந்து விலகக் காரணமாகக் கூடும்.


இவ்வாறான நடைமுறை ரீதியான சிக்கல்கள் பல இன்னமும் இப்பொறிமுறையில் காணப்படுவதுடன் தகவலுக்கான சட்டம் கிராமங்களை நோக்கிப் பயணிக்காததையும் மேலுமொரு குறையாகக் குறிப்பிடலாம். ஏனெனில் பொதுமக்கள் தினங்களில் பகிரங்க உத்தியோகத்தர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் முன்னே மக்கள் சிரம் தாழ்த்த வேண்டியிருப்பது அதனால்தான். தகவலுக்கான சட்டத்தின் நடைமுறைத் தன்மை தொடர்பில் இதைவிட மக்கள் அறிவூட்டப்பட்டால் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கான நோக்கம் சந்தேகமின்றி யதார்த்தமாக மாறக் கூடும்.

தகவலுக்கான சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு அதன் பிரதான அங்கமானதுடன், பல்வேறு முட்டிமோதல்களைக் கடந்து இதுவரை பயணித்துள்ளது. 2017 பெப்ரவரி 03ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 2018லிருந்து இதுவரை ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளும் பரிந்துரைகளும் தொடர்பிலான சுருக்கமான பகுப்பாய்வொன்றின் மூலம் அதன் செயற்பாடு பற்றி ஓரளவு புரிதலைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

[28] https://medialk.com/archives/4162

# 8. பகுப்பாய்வு - 2018 முதல் 2022ம் ஆண்டு வரையான தகவலுக்கான பொறிமுறையும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடும்.

## 8.1 2018, 2019, 2020, 2021ம் ஆண்டுகளில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் அளவு




[29] ஆதாரம் - செயற்றிறன் அறிக்கை 2021, தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

மேலேயுள்ள விளக்கப்படத்தில் 2018-2021 வரை கிடைத்த முழுமையான மேன்முறையீடு களின் எண்ணிக்கையும் ஒப்பீட்டு ரீதியில் அவ்வாறான வருடங்களுக்கிடையில் விகிதாசார மாற்றமும் காட்டப்பட்டுள்ளது. அதில் மிக அதிகமான மேன்முறையீடுகள் 1089 – 42% 2019ல் கிடைத்ததுடன் மிகக் குறைந்த 729 – 28% 2020ல் கிடைத்துள்ளது. அவ்வாறே இந்நிரல் விளக்கப்படம் ஆணைக்குழுவால் பூரணமான மேன்முறையீடுகள் மற்றும் நிராகரிக்கப்பட்ட பூரணமற்ற மேன்முறையீடுகளின் எண்ணிக்கையைச் சித்தரிக்கின்றது. 2018ம் ஆண்டிலிருந்து ஆணைக்குழுவால் மறுக்கப்பட்ட மேன்முறையீடுகள் படிப்படியாகக் குறைந்துள்ளது என்பதை விளக்கப்படம் காட்டுகின்றது. பரிபூரணமான மேன்முறையீடுகள் மற்றும் மறுக்கப்பட்ட மேன்முறையீடுகளுக்கிடையில் 2018ம் ஆண்டு மேன்முறையீடுகளில் 44% மறுக்கப்பட்டதுடன் 2019ல் 33% மறுக்கப்பட்டுள்ளது. 2020ல் 26ழூமானவை மட்டுமே மறுக்கப்பட்டன. 2021ல் பெறப்பட்ட மேன்முறையீடுகளில் 68ழூ பரிபூரண மேன்முறையீடு களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் 22% பரிபூரணமற்ற மேன்முறையீடுகளாக மறுக்கப் பட்டுள்ளன.

[29] https://www.rticommission.lk/web/images/pdf/Re--edited-2021---English---Draft-RTIC-Performance-Report---21.10.2022-1.pdf

## 8.2 விசாரித்து முடித்த மற்றும் பிற்போடப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை

ஆணைக்குழு 2021ல் 937 மேன்முறையீடுகளை விசாரித்ததுடன் 2020ல் 999 மேன்முறையீடு கள் விசாரிக்கப்பட்டன. 2020ல் 472 மேன்முறையீடுகள் பிற்போடப்பட்டன/அரைவாசி விசாரிக்கப்பட்டன. அவ்வாறே 2021ல் ஆணைக்குழுவால் 495 மேன்முறையீடுகள் பிற்போடப்பட்டன/அரைவாசி விசாரிக்கப்பட்டதுடன் ஆணைக்குழு 2021ல் 475 இறுதி உத்தரவுகளை (விலக்கப்பட்ட 59 உள்ளிட்ட) வழங்கியது.

## 8.3 ஆணைக்குழுவின் தீர்ப்பு

| ஆண்டு | பரிபூரண மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2017 | 230 | 57 |
| 2018 | 800 | 549 |
| 2019 | 1089 | 709 |
| 2020 | 729 | 427 |
| 2021 | 825 | 475 |

[30] ஆதாரம் - செயற்றிறன் அறிக்கை 2021, தகவலுக்கான உரிமை ஆணைக்குழு

அவ்வாறே 2017 பெப்ரவரி 3ம் திகதி செயற்பட ஆரம்பித்த நாள் முதல் முடிக்கப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் சுமார் பதினொரு தரப்பினர் 2021 டிசம்பர் மாதமளவில் ஆணைக்குழுவின் உத்தரவுகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடுகளை சமர்ப்பித்துள்ளனர்.


## 8.4 2021.12.20ம் திகதியிலிருந்து 2022.12.31ம் திகதிவரை ஆணைக்குழுவின் மேன் முறையீட்டு விசாரணை தொடர்பான புள்ளி விபரம்

<table>
<tr><td colspan="2">சாராம்சம்</td><td colspan="3"></td></tr>
<tr><td>முற்றாகத் தீர்க்கப்பட்டவை<br><br>முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டவை<br>முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்வை<br>தகவல்கள் வழங்கப்பட்டவை<br>ஏனையவை<br>மறுக்கப்பட்டவை<br>தள்ளுபடி செய்யப்பட்டவை</td><td><br><br>880<br>70<br>252<br>73<br>70<br>106</td><td><br><br>1451</td><td>புதிய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை<br><br>2023 ல் விசாரணைக்காக பட்டியற்படுத்தப்பட்டுள்ள மேன்முறையீடுகள்</td><td>மொத்தம்</td></tr>
<tr><td colspan="2">கிடப்பில் இடப்பட்ட மேன்முறையீடுகள்</td><td>14</td><td rowspan="3">380</td><td rowspan="3">1969</td></tr>
<tr><td colspan="2">2022.12.31 திகதிக்குப் பிற்போடப்பட்ட மேன்முறையீடு</td><td>124</td></tr>
<tr><td colspan="2">மொத்த எண்ணிக்கை</td><td>1589</td></tr>
</table>

[30] https://www.rticommission.lk/web/images/pdf/Re--edited-2021---English---Draft-RTIC-Performance-Report---21.10.2022-1.pdf

[31] http://www.rticommission.lk/web/images/pdf/Statics-2022/Statistics-20.12.2021---31.12.2022.pdf

## 8.5 2022ம் ஆண்டு ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு விசாரணை





ஒட்டுமொத்த ரீதியாக கடந்த சில ஆண்டுகளில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடும் பிரசைகள் தமது தகவல் அறியும் உரிமையின் ஆணைக்குழுவுடன் கொடுக்கல் வாங்கல் செய்த முறையும் பற்றி சராசரியான கருத்தொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு மேலேயுள்ள புள்ளிவிபரத் தரவுகள் உதவி புரியும். 2022ம் ஆண்டில் ஆணைக்குழுவிடம் சமா்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் முன்னிலையில் ஆணைக்குழு அவர்களின் தத்துவங்களுக்கு ஏற்ப, முழுமையான தகவல் வழங்கல்கள் 880-45%, அரைவாசித் தகவல் வழங்கல்கள் 70-3மூ, தகவல் வழங்கல்கள் 253-13%, நிராகரிக்கப்பட்டவை 70-4%, தள்ளுபடி செய்யப்பட்டவை 106-5%, கிடப்பிலிடப்பட்ட மேன்முறையீடுகள் 14-1%, பிற்போடப்பட்ட மேன்முறையீடுகள் 124-6%, ஏனையவை 74-4% மற்றும் 2023ல் விசாரணைக்காக பட்டியற்படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை 380-19% என கண்காணிக்கப்பட்டுள்ளது.

2022 ஜனவரி மாதத்திலிருந்து 2023 பெப்ரவரி மாதம் வரை ஆணைக்குழுவின் செயற்பாடு, பரிந்துரைகள், அவை நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடர்பில் 2016ன் 12ம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்தின் கீழ் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் தகவல் அலுவலரிடம் தகவல் கோரினாலும், அக்கோரிக்கைகள் தொடர்பில் எந்தவொரு பதிலும் ஆணைக்குழுவால் இதுவரை வழங்கப்படவில்லை. அதன் பின்னர் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் செயல்முறைக்கு ஏற்ப, தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்தக் கால எல்லையிலும் மனித உரிமைகள் முதலுதவி மத்தியநிலையத்தால் தகவலுக்கான சட்டம் தொடர்பில் மக்களை அறிவூட்டி அவர்களின் பிரச்சனைகளுக்கு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பகிரங்க அதிகாரசபைகளின் மூலம் தகவல்களைக் கோருவதற்கு ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்களைத் தூண்டுவதற்கான முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.


**8.6. 2022ம் ஆண்டு மே மாதம் முதல் 2023ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலான மனித உரிமைகள் முதலுதவி மத்தியநிலையத்தின் ஊடாக மாவட்டத்திற்கு ஏற்ப, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களும் மேன்முறையீடுகளும்.**





**ஆதாரம் - பின்னிணைப்பு 01**

இங்கு உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப கருத்திற் கொள்ளப்படும் போது 08 மாவட்டங்களுக்கிடையில் 75 விண்ணப்பங்களை இனங்காண முடியும். அதற்கேற்ப, மொனராகலை மாவட்டத்திலிருந்து 24ம், மாத்தறை மாவட்டத்திலிருந்து 23ம், காலி மாவட்டத்திலிருந்து 11ம், குருணாகல் மாவட்டத்திலிருந்து 07ம் அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து 04ம், கம்பஹா மாவட்டத்திலிருந்து 03ம் புத்தளம் மாவட்டத்திலிருந்து 02ம் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 01ம் என்ற வகையில் பகிரங்க அதிகாரசபைகளிடம் தகவலுக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**தகவலுக்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள துறைகள்**




இவ்வாறு தகவல்கள் கோரப்பட்டுள்ள 03 துறைகள் இங்கு இனங் காணப்பட்டுள்ளன. அதாவது காணிகளுடன் தொடர்புடைய தகவல்கள், பொது நிருவாகத்துடன் தொடர்புடைய தகவல்களும் மனித உரிமை விடயங்கள் தொடர்பான தகவல்களும் என்ற வகையில் அமைந்துள்ளன. அதற்கேற்ப, 08 ஒட்டுமொத்த மாவட்டங்களையும் கருத்திற் கொள்ளும் போது, பொது நிருவாகம் தொடர்பான விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள தகவல் கோரிக்கைகளின் அளவு 71%மாகக் காணப்படுவதாகவும் காணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தகவலுக்கான கோரிக்கைகளின் அளவு 24%மாகக் காணப்படுவதாகவும் மனித உரிமைகளுக்கு ஏற்புடையதாக விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளின் அளவு 5%மாகவும் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.




இங்கு மேற்குறிப்பிட்ட மாவட்டங்கள் அனைத்தையும் கருத்திற் கொள்ளும் போது, ஒப்பீட்டு ரீதியாக எடுத்துக் கொண்டால் அதிகமான தகவல்களுக்கான கோரிக்கைகளின் அளவு பொது நிருவாகத் துறை தொடர்பிலேயே கோரப்பட்டுள்ளன என்பதால் அதனைத் தொடர்ந்தும் பரீட்சித்துப் பார்க்கையில் அத் துறைக்கு ஏற்புடைய அதிக தகவல் கோரிக்கைகள் மாத்தறை மாவட்டத்திலிருந்து விடுக்கப்பட்டுள்ளன என்பதும், அவ்வெண்ணிக்கை விகிதாசார ரீதியாக எடுத்துக் கொண்டால் 38% மாகும் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது குறித்த அப்பொது நிருவாகத் துறையுடன் தொடர்புடைய அதிக சதவீதமான தகவலுக்கான கோரிக்கைகள் மொனராகலை மாவட்டத்திலிருந்து விடுக்கப்பட்டிருப்பதுடன் அது 28% சதவீதமாகும்.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் முதலாவது தகவலுக்கான கோரிக்கை ஏற்புடைய பகிரங்க அதிகாரசபையின் தகவல் அலுவலரிடமே விடுக்கப்பட வேண்டும். அவரிடமிருந்து தகவல்கள் கிடைக்கவில்லையாயின், அல்லது கிடைத்த தகவல்கள் தொடர்பில் திருப்தியடையாவிடின், இரண்டாவதாக அப் பகிரங்க அதிகாரசபையிலேயே உள்ள குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் ஏற்புடைய கால எல்லையான 14 நாட்களுக்குள் மேன்முறையீடு செய்தல் வேண்டும். அதனூடாகவும் திருப்தியடையக் கூடிய தகவல் கிடைக்காதாயின், 02 மாதங்களுக்குள் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்ய வேண்டியதுடன், அதனூடாகவும் திருப்தியடையக் கூடிய தகவல்கள் கிடைக்கவில்லையாயின், ஒரு மாத காலத்திற்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் அதாவது நீதிமன்ற நடவடிக்கைகள் மீது ஈடுபடுவதற்கான ஆற்றல் இச் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, மேற்குறித்த தகவலுக்கான கோரிக்கைகளைக் கருத்திற் கொள்ளும் போது முதலாவது தகவல்

உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்த தகவலுக்கான கோரிக்கைகளில் 62மூமானவை தொடர்பில் தகவல் உத்தியோகத்தரால் போதுமான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் 25மூமானவை தொடர்பில் தகவல் உத்தியோகத்தரால் போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது அவதானிக்கப்படுகின்றது.




மேலே குறிப்பிட்டுள்ள அலுவலரால் போதுமான தகவல்களை வழங்காத 25%மானவற்றை மேலும் கவனத்திற் கொள்ளும் போது 32% மானவை குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன், எஞ்சியுள்ள 68% விண்ணப்பதாரிகள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்காதிருப்பது அவதானிக்கப்படுகின்றது. இதில் குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு செய்துள்ள அளவைத் தொடர்ந்தும் கவனத்திற் கொள்ளுகையில், அதில் 50%மானவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடமிருந்து போதுமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், எஞ்சிய 50%மானவற்றுக்கு ஏற்புடைய தகவல்கள் உரிய முறையில் கிடைக்கவில்லை என்பது அவதானிக்கப்படுகின்றது.

அவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட அலுவலரால் ஏற்புடைய தகவல்கள் உரிய முறையில் வழங்கப்படாத அளவை மேலும் கவனத்தில் கொள்ளும் போது, அவை அனைத்தும் தொடர்பில் விண்ணப்பதாரியால் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிடம் உரிய முறையில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்றே அவதானிக்கப்படுகின்றது. அம் மேன்முறையீடுகளை மேலும் கவனத்திற் கொள்ளும் போது, அதில் 67%மானவை இன்னமும் ஆணைக்குழுவால் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் எஞ்சியுள்ள 33%மளவிலானவற்றுக்கு ஆணைக்குழு ஏற்புடைய தரப்பினரை அழைத்து உரிய முறையில் விசாரணை நடத்திய பின்னர் போதுமான தகவல்கள் விண்ணப்பதாரிக்குக் கிடைத்துள்ளது என்றே அவதானிக்கப்படுகின்றது.

மேலே காட்டப்பட்டுள்ளவாறு இதனைப் பகுப்பாய்வு செய்யும் போது தகவல்களைக் கோரியிருந்த விண்ணப்பதாரிகளுக்கிடையில் 13%மானவர்கள் தகவல் அலுவலரிடமிருந்து பதிலேதும் இல்லாத போது அல்லது போதுமான தகவல்கள் கிடைக்காத போது அதற்கு எதிராக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, மேலிடத்தில் மேன்முறையீடு செய்யாமல், அச் செயற்பாட்டைக் கைவிட்டுள்ளமை தெரிய வருகின்றது. எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வின் மூலம் மேலே 08 ஒட்டுமொத்த மாவட்டங்களிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவலுக்கான கோரிக்கைகளில் 67மூமானவைக்குப் போதுமான தகவல்கள் கிடைத்துள்ளதுடன் 20மூமானவைக்கு போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை என்பது தெரியவருகின்றது.

அவ்வாறே 08 ஒட்டுமொத்த மாவட்டங்களினதும் 13மூ விண்ணப்பதாரிகள் இத் தகவலுக்கான சட்டத்தின் கீழான மேன்முறையீட்டுச் செயற்பாட்டில் நுழைவதைத் தவிர்த்திருப்பதும் அவதானிக்கப்படுகின்றது.

இக்கால எல்லலைக்குள் மொனராகலை மாவட்டம் அதிக தகவலுக்கான விண்ணப்பங்களை பகிரங்க அதிகாரசபைகளிடம் சமர்ப்பித்த மாவட்டமாக அவதானிக்கப்படுவதுடன், அங்கே மக்களுக்கு இது தொடர்பில் சிறந்த ஒத்துழைப்பு வழங்கிய மொனராகலை மாவட்ட மனித உரிமைகள் முதலுதவி மத்தியநிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. எச்.எல். அச்சல பியுமான்ன அவர்கள் தமது அனுபவங்களைக் கீழ்வருமாறு குறிப்பிட்டார்.

'தகவலறியும் பொறிமுறையில் 70% வரையான பகிரங்க அதிகாரசபைகள் இப்போது தகவல்களை வழங்கினாலும், அதற்காக எடுத்துக் கொள்ளப்படும் நீடித்த காலம் தகவலுக்கான விண்ணப்பதாரியின் ஆர்வம் குறைக்கப்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது' எனக் குறிப்பிட்டர். அவ்வாறே 'பகிரங்க அதிகாரசபையில் தகவலுக்கான சட்டம் தொடர்பில் இன்னமும் காணப்படுகின்ற குறைவான அறிவும், கவனயீனமும் சில சந்தர்ப்பங்களில் தகவல்களை வழங்காதிருக்கக் காரணமாகியுள்ளது' எனவும் குறிப்பிட்டார். சுயாதீன ஆணைக்குழுக்களுக்கிடையில் ஓரளவிற்கேனும் வினைத்திறனுடன் செயலாற்றும் ஆணைக்குழுவாக தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவைக் குறிப்பிட முடிந்தாலும், பெரும்பாலும் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கு அல்லது அவை தொடர்பில் பதில் வழங்குவதற்கு நீண்டகாலம் செல்வது அதிலுள்ள பிரச்சனை' எனவும் குறிப்பிட்டார். அதுமட்டுமன்றி, அது தொடர்பில் விசாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் உரிய முறையில் செயற்படாமையை இன்னுமொரு குறைபாடாக அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறே தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் அப்பொறிமுறை தொடர்பில் பிரசைகளின் ஆர்வமும் நம்பிக்கையும் பெருமளவில் சிறப்பாக இல்லை எனக் கூறியதுடன், அரச பொறிமுறையின் வினைத்திறனின்மை காரணமாக இத் தகவலுக்கான உரிமைச் சட்டமும் அவ்வாறே செயற்படுகின்ற இன்னுமொரு சட்டம் மட்டுமே என்ற கருத்து மக்களிடம் காணப்படுவதே அதற்கான முக்கிய காரணமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களில் சுமார் 1%, 2% வீதத்தினருக்கு இது தொடர்பில் உரிய புரிதல் இருந்தாலும், பெரும்பாலானவர்களுக்கு இதன் உரிய பலனைப் பெற்றுக் கொள்வதற்கான புரிதலும் விழிப்புணர்வும் இல்லாதிருப்பதும் ஒரு சமூகக் குறைபாடு எனக் குறிப்பிட்டார். அக் குறைபாட்டைத் தவிர்த்துக் கொள்வதற்கு சிவில் செயற்பாட்டாளர்களாக எமக்கும் அரசுக்கும் உரிய அறிவூட்டல் வேலைத்திட்டமொன்று அத்தியாவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இச் செயற்பாட்டுடன் தொடர்புடைய அலுவலர்களுக்குக் காலத்துக்குக் காலம் உரிய பயிற்சியை வழங்காதிருப்பது பகிரங்க அதிகாரசபைகளின் செயற்பாட்டிலுள்ள மிகப் பெரிய பிரச்சனை. தகவலுக்கான சட்டம் அமுலாக்கப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட பயிற்சிகளின் பின்னர் மீண்டும் அவர்களது அறிவை இற்றைப்படுத்தும் விதமாக உரிய பயிற்சி வழங்கப்படாத காரணத்தால், இச்சட்டம் மற்றும் அச் சுற்றுநிருபங்களையும் பரிசீலித்தல் அல்லது அது தொடர்பான அறிவை இற்றைப்படுத்தல் போன்றவை அவர்களிடையே இடம்பெறுவதில்லை. அதனால், சட்டத்தின் மூலம் பிரசைகளுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் மட்டுப்படுவதுடன், தகவல் கோரிக்கைக்கான அபிலாசையை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாமற் போகிறது எனவும் குறிப்பிட்டார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களிடையே சட்டம் தொடர்பில் காணப்படுகின்ற குறைந்த அறிவு காரணமாக வழங்கக் கூடிய தகவல்களையும் மறைத்து, தகவல்களை வழங்காதிருக்கவோ போலியான தகவல்களை வழங்குவதற்கு முயற்சிப்பதாகவும் கூறினார். அதனால், இந்த குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமாயின், அரச அலுவலர்களைப் போன்றே நாட்டின் பிரசைகளுக்கும், தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்பில் மிகச் சிறந்த விழிப்புணர்வை வழங்குதல் காலத்தின் அவசியம் என இறுதியாக அவர் குறிப்பிட்டார்.'

# நிறைவும் பரிந்துரைகளும்

இந்த ஆய்வுக்கு ஏற்ப நாம் அவதானிக்கின்ற விடயம் தகவலுக்கான உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 6 வருடங்கள் பூர்த்தியடைந்திருந்தாலும், இன்னமும் இப் பொறிமுறை யில் சிற்சில குறைபாடுகள் காணப்படுவதாக அவதானிக்கப்படுகின்றது. அங்கு அவதானிக்கப் பட்ட பிரதானமான சில காரணங்கள் உள்ளன.

பிரசைகள் தகவல்களைக் கோரிய போதும், வெறுமனே பகிரங்க அதிகாரசபைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் அதனை விரைவாக வழங்குவதற்கு முயற்சிக்காதது அவற்றிடையே பிரதானமானது. அவர்களுக்கு இச் சட்டம் பற்றிய உரிய அறிவு இல்லாதிருப்பதும் கவனயீனமுமே அதற்கான காரணம். அவ்வாறு அதுபற்றிய அறிவு காணப்படுமாயின் பிரசைகளின் தகவலுக்கான உரிமையை ஏன் பாதுகாக்க வேண்டும் மற்றும் அவ்வாறு செய்யத் தவறுவதால் அவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை காரணமாகவும் அவர்கள் உரிய முறையில் தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள்.

அவ்வாறு பகிரங்க அதிகாரசபைகளால் உரியவாறு தகவல்கள் வழங்கப்படுமாயின் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவில் இந்தளவிற்கு மேன்முறையீட்டுக் குவியலொன்று குவிக்கப்பட மாட்டாது. இன்னொரு வகையில் பகிரங்க அதிகாரசபைகள் முன்கூட்டி தகவல்கள் விடுவிக்கப்படுவதை உரியவாறு மேற்கொண்டிருப்பின் அப்போதும் இந்த வகையில் தகவல்களைத் தெரிந்து கொள்வதற்குப் பெரும் சிரமத்தை ஏற்க வேண்டிய தேவை ஏற்பட மாட்டாது.

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவும் மேன்முறையீட்டுக்குப் பதில் அளித்து விசாரணைகளையும் நடத்துவதற்கு அதிக காலத்தை எடுப்பதன் ஊடாக தகவலுக்கான விண்ணப்பதாரிக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் தகவல்கள் கிடைக்காமல் போகின்றது. அதனால், ஆணைக்குழுவின் செயற்பாடு தொடர்ந்தும் வினைத்திறனுடன் செய்யக் கூடிய பொறிமுறையாகத் தயாரிக்கப்படுமாயின் இச்சட்டத்தினதும் ஆணைக்குழுவினதும் உண்மையான நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இன்னொரு வகையில் பல வருடங்கள் கடந்தாலும் பிரசைகளிடம் இச்சட்டம் தொடர்பில் இன்னமும் நேர்மறையான ஒரு பார்வைக் கோணத்தைக் காண முடியவில்லை. மேலுள்ள ஆய்விலிருந்தும் பெரும்பாலான நபர்கள் இச் செயற்பாட்டை உரியவாறு பின்பற்றவில்லை என்பதே தெரிய வருகின்றது. அதற்கு பிரசைகளிடம் இச்சட்டமும் அதன் செயற்பாடும் தொடர்பில் உரிய விழிப்புணர்வு இல்லாதிருப்பதே அடிப்படைக் காரணமாகத் தெரிகின்றது. தகவல் உத்தியோகத்தரிடமிருந்து பதில் கிடைக்காத போது, காலம் செல்லச் செல்ல அத்தகவலின் தேவை குறைந்து போவதன் காரணமாக பிரசைகள் அடுத்த கட்ட நடவடிக்கையொன்றைப் பற்றிச் சிந்திப்பதில்லை. பெரும்பாலானோருக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியவும் இல்லை. எனவே தகவலறியும் பொறிமுறையை வலுப்படுத்தவது போலவே பிரசையின் விழிப்புணர்வையும் பங்கேற்பையும் உயர்த்துவதற்கு குறித்த வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பது அத்தியாவசியம் என்பது தெளிவாகின்றது.

அதற்கேற்ப, இவ்வாய்வில் சந்தித்த விடயங்களின் அடிப்படையில் தகவலறியும் பொறிமுறையை மேலும் ஒழுங்குபடுத்தி விரிவாக்குவதற்காக கீழ்வரும் பரிந்துரைகளை முன்வைக்கின்றோம்.

1. அபிவிருத்தி மூலோபாயங்களை மேம்படுத்தும்

அரச கொள்கைகளுடன் தகவலறியும் உரிமைக்கு உதவுகின்ற நிறுவனக் கட்டமைப்பும் ஒருங்கிணைப்புச் செயற்பாடும் வலுப்பெறும் வேலைத் திட்டமொன்றை உருவாக்குதல்.

2. தகவலறியும் உரிமை தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளை மேலும் ஒழுங்குபடுத்தி சட்டத்தின் வளர்ச்சிகள் தொடர்பில் அவர்களை தொடர்ந்தும் அறிவூட்டுதல்

3. தகவலுக்கான உரிமை மற்றும் தகவல்களை வழங்கும் செயற்பாடு அரச சேவை உத்தியோகத்தர்களின் பொதுவான பயிற்சியில் உள்ளடக்கி புதிதாக இணைத்துக் கொள்ளப்படும் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் அது தொடர்பில் பயிற்சியை வழங்குதல்.

4. பகிரங்க அதிகாரசபைகளின் தகவல் அலுவலர்கள், குறித்தொதுக்கப்பட்ட அலுவலர்கள், உயர் அதிகாரிகளுக்கு தகவல்களை வழங்கவும் நிறுவன ரீதியான தகவல்களை முன்கூட்டித் வெளியிடவும் பயிற்றுவித்தல்.

5. முன்கூட்டித் தகவல்களை வெளியிடுதல் அரச அலுவலர்களினதும் நிறுவனங்களினதும் நடைமுறையாக மாற்றுதல்.

6. தகவலுக்கான உரிமையை நடைமுறைப்படுத்துவதற்காக பகிரங்க அதிகாரசபைகளில் தகவல்கள் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் அதற்கு ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபையிலும் ஆவணப்படுத்தலுக்கு மேலதிகமாக நிகழ்நிலைத் தகவற் களஞ்சியமொன்று தாபிக்கப்பட்டு பேணப்பட்டு வர நடவடிக்கை எடுத்தல்.

7. தகவலறியும் சட்டத்தின் செயற்பாட்டுக்கு தடை விதிக்கின்ற வேறு சட்டங்கள், சட்ட ஒழுங்குவிதிகளை தளர்த்தி தகவலுக்கான உரிமையை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

8. பிரசைகளின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் பங்கேற்பை உயர்த்துவதற்கும் நாடு முழுவதும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

9. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்கு வரும் மேன்முறையீடுகளை விசாரிக்கும் வினைத்திறனை அதிகரிப்பதற்கு குறிப்பிட்ட வேலைத்திட்டமொன்றைத் திட்டமிடுதல், பிரதான காரியாலயத்தை அடிப்படையாகக் கொண்ட மாகாண காரியாலயங்களைத் தாபித்தல்.

10. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகள் உரியவாறு நடைமுறைப் படுத் தப் படுகின் றனவா என்பதை ஆராய்வதற்காக கண்காணிப்புக் கட்டமைப்பொன்றை செயற்பாட்டில் உள்ளடக்குதல்.

11. புதிய வளர்ச்சியடைந்த தொழில்நுட்பத்தை தகவல் கோரல், தகவல் வழங்கல் போன்றே தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளிலும் பயன்படுத்தி தாமதங்களைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

12. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகள் நிகழ்நிலைத் தொழில்நுட்பத்திற்குக் கொண்டு வந்து, பிரதேச ரீதியாக தூரப் பிரதேசங்களில் வாழும் விண்ணப்பதாரிகளுக்கு விசாரணைகளுக்கான பிரவேசத்தை மேலும் இலகுவாக்குவதும் அதனூடாக தகவலுக்கான ஆணைக்குழுவின் விசாரணைகளை துரிதப்படுத்துதலும்.

# தொடர்புடைய ஆதாரங்கள்


**இணையத் தளங்கள்**

1. சாவியைக் கையில் தரும் தகவற் சட்டம்“ (n.d.). Online Sinhala News Site in Sri Lanka. https://yukthiya.lk/9958-2/
2. *About RTI – Right To Information – Sri Lanka*. (n.d.). https://rti.gov.lk/rti-unit/
3. User, S. (n.d.). *Right to Information Commission of Sri Lanka* – எப்போதும் கேட்க்கப்படும் கேள்விகள் http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=8&Itemid=111&lang=si
4. தகவலறியும் சட்டமும் போக்கிரிகளும். (n.d.) https://www.lankadeepa.lk/features/%E0%B6%AD%E0%B6%BB%E0%B6%AD%E0%B6%BB-%E0%B6%AF%E0%B6%B1-%E0%B6%9C%E0%B6%B1%E0%B6%B8-%E0%B6%B4%E0%B6%B1%E0%B6%AD-%E0%B7%84-%E0%B6%AD%E0%B6%9A%E0%B6%9A%E0%B6%A9/2-528842#adahas
5. தொகுப்பாசிரியர் (2021, March 15)சீனி கருத்திட்டத் தகவல்கள்: மகாவலிக்கு எதிராக வழக்கு தொடருமாறு கோரல்: தகவலுக்கான ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்! - *MediaLK*. MediaLK. https://medialk.com/archives/4162

**நூல்கள்**

1. செயற்றிறன் அறிக்கை 2021, தகவலுக்கான உரிமை ஆணைக்குழு https://www.rticommission.lk/web/images/pdf/Re--edited-2021---English---Draft-RTIC-Performance-Report---21.10.2022-1.pdf

**அரசியலமைப்புத் திருத்தங்களும் சட்டங்களும்**

1. 20வது அரசியலமைப்புத் திருத்தம் https://www.parliament.lk/uploads/acts/gbills/sinhala/6176.pdf
2. 21வது அரசியலமைப்புத் திருத்தம https://www.parliament.lk/files/pdf/constitution-si.pdf
3. 2017 பெப்ரவரி ஜனவரி 20ம் திகதியிலான (2002/42)ம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தல் http://documents.gov.lk/files/egz/2017/1/2002-42_S.pdf
4. 2016 16ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம். http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-si-13122018.pdf

**ஆணைக்குழுவின் தீர்மானங்களும் வழக்குத் தீர்ப்புகளும்.**

1. RTI 719/2018.http://www.rticommission.lk/web/images/pdf/0719-2018/5.-RTIC-Appeal-Documentary-In-Person-Hearing-719-2018--.---.pdf
2. RTIC 97/2017. http://www.rticommission.lk/web/images/pdf/rticappeal-097-2017/rtic-97-2017-si-19122018.pdf
3. (2021)CA/RTI/0004/2021.https://www.rticommission.lk/web/images/pdf/Court_2023/Chamara_Samapath_Vs_SL_Parliament.pdf

பின்னிணைப்பு 1

| தகவல்களைக் கோரிய நபரும் மாவட்டமும் | | தகவல்களின் தன்மை | | | தகவல்கள் கோரப்பட்ட திகதி | தகவல்கள் கோரப்பட்ட பகிரங்க அதிகாரசபை | போதுமான தகவல்கள் கிடைத்துள்ளனவா? | குறித்தொதுக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதா? | போதுமான தகவல்கள் கிடைத்துள்ளனவா | தகவல் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு சமர்பிக்கப்பட்டுள்ளதா? | விசாரணைகளும் பரிந்துரைகளும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காணி | நிருவாகம் | மனித உரிமைகள் | | | | | | | |
| 1. | ஏ.எம். பொடிமஹத்தயா மொனராகலை | | | X | 2022/05/24 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 2. | எம்.பீ. மைத்திரிபால மொனராகலை | X | | | 2022/05/07 | பிரதேச பொதுச் செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 3. | ஆர்.எம். நிஷான் இமங்க மொனராகலை | | X | | 2022/06/20 | சமுர்த்தி பொதுச் சங்கம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | பாதிக்கப்பட்டவர் அத்தகவல்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனத் தெரிவித்தார். | - | - | - |
| 4. | எச்.எல். அச்சல பியுமந்த மொனராகலை | | X | | 2022/06/23 | பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 5. | ரீ. டபிள்யு ரம்யலதா மொனராகலை | | X | | 2022/07/30 | பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 6. | எஸ். தினுஷா செவ்வந்தி மொனராகலை | | X | | 2022/07/30 | இலங்கை மின்சார சபை | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 7. | கே. எ. இசுறு எரந்த மொனராகலை | | X | | 2022/08/06 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | ஆம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | |
| 8. | ரீ.டபிள்யு நயனா வசந்தி மொனராகலை | X | | | 2022/08/23 | வெல்லவாய பிரதேச சபை | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 9. | ஈ.கே. நிர்மலா குமாரி மொனராகலை | X | | | 2022/09/13 | பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 10 | ஆர்.எம். இந்திக்க சம்பத் மொனராகலை | X | | | 2022/09/14 | மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 11. | டீ.எம் ஹர்ஷி கிஷான் மொனராகலை | X | | | 2022/09/16 | நீர்ப்பாசனத் திணைக்களம் பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12. | ஏ. எம். சந்திராவதி மொனராகலை | X | | | 2022/09/20 | மெதகம பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 13. | எஸ்.எம். பியதிலக்க மொனராகலை | | X | | 2022/09/21 | பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 14. | ஆர்.எச்.எம். பிரசாத் ரத்னாயக்க மொனராகலை | | X | | 2022/09/25 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை | பாதிக்கப்பட்டவர் அத்தகவல்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனத் தெரிவித்தார். | | | |
| 15. | எம்.எச் எமிநோனா மொனராகலை | X | | | 2022/09/26 | பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 16. | டபிள்யு.எம்.பியசேன மொனராகலை | | X | | 2022/10/03 | பிரதேச பொதுச் செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 17. | கே. ஜீ. பியதாச மொனராகலை | | X | | 2022/10/08 | பாதுகாப்ப அமைச்சு | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 18. | அங்கமுத்து வீரப்பா சுபாஷினி மொனராகலை | | X | | 2022/11/09 | ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 19. | எஸ்.நிமாலி மொனராகலை | | X | | 2022/11/10 | வெல்லவாய பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 20. | ஜ.டி.ஜ.எம். நவரத்ன மொனராகலை | | X | | 2022/11/16 | தனமல்வில பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 21. | ஈ.எம்.நித்யா ஜீவந்தி மொனராகலை | | X | | 2022/11/28 | வெல்லவாய பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | | | |
| 22. | கே. ஏ. இசுறு எரந்த மொனராகலை | X | | | 2022/12/12 | மாவட்ட கமநல சேவைகள் அலுவலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை | ஆம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | | |
| 23. | கே. ஏ. இசுறு எரந்த மொனராகலை | X | | | 2022/12/12 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை | ஆம் | போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை | ஆம் | தகவல்ஆணைக் குழுவிடம் மேன்முறையீடு சமா்ப்பிக்கப்பட்ட பின்னர் குறித்தொதுக்கப் பட்ட அலுவலர் தகவல்களை வழங்கிய பின்னர் அது அகற்றப்பட்டது |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24. | எச்.எல். அச்சல பியுமந்த மொனராகலை | | X | | 2022/12/22 | வலயக் கல்விக் காரியாலயம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | ஆம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - |
| 25. | ஏ.எச்.எம்.என்.கே. அபேசிங்க ஆனமடுவ | | X | | 2022/06/13 | வலயக் கல்விக் காரியாலயம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 26. | டீ.எம்.புஞ்சிஹேவா மொனராகலை | | X | | 2022/09/25 | கமநல சேவைகள் திணைக்களம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 27. | எம்.சதாசிவம் தெனியாய | | X | | 2022/06/17 | கொட்டப்பல பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை | - | - | - | - |
| 28. | இந்துல டயஸ் விஜேசேக்கர மாத்தறை | | X | | 2022.05.11 | வெலிகம பிரதேச சபை | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 29. | வெல்லபட ஹேவகே தர்மதாச மாத்தறை | | X | | 2022/05/26 | வெலிப்பிட்டிய பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 30. | இமதுவ ஹேவகே நந்தசேன மாத்தறை | | X | | 2022/05/27 | பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 31. | கே.பீ.வீ.கல்யாணி சந்திரலதா மாத்தறை | | X | | 2022/05/30 | மாலிம்பட பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 32. | டபிள்யு. அநுர மாத்தறை | | X | | 2022/06/22 | மாத்தறை வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 33. | எம்.டபிள்யு.அமிதா நிலந்தி மாத்தறை | | X | | 2022/06/24 | மாத்தறை வீடு அபிவிருத்தி அதிகாரசபை | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 34. | இனோக்கா உதயங்கனி மாத்தறை | | X | | 2022/07/15 | பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 35. | ஜீ.பீ.சமிந்த சம்பத் மாத்தறை | | X | | 2022/08/12 | தேசிய வீடமைப்பு அதிகாரசபை | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 36. | டபிள்யு. ரஜித்தா நியோமி மாத்தறை | | X | | 2022/09/02 | சமூக நீர்வழங்கல் திணைக்களம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 37. | தயானந்த சஹபந்து மாத்தறை | | X | | 2022/09/02 | திஹகொட பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 38. | ஏ.டீ.திலினி மதுமாலி, மாத்தறை | | | X | 2022/09/13 | வெலிபிட்டிய பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 39. | கல்பொக்க ஹேவகே நிஹால் சிசர மாத்தறை | | X | | 2022/10/12 | அரச சேவைகள் ஆணைக்குழு | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 40. | எஸ்.எச்.குசுமாவதி மாத்தறை | | | X | 2022/10/21 | பேராதெனியா கமத்தொழில் திணைக்களம் | போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை | - | - | - | - |
| 41. | ஆர்.அஜித் பிரியந்த மாத்தறை | | X | | 2022/11/27 | வெலிகம பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. | - | - | - | - |
| 42. | எச்.பீ.சந்துனி மாத்தறை | | X | | 2022/11/28 | வெலிகம பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. | - | - | - | - |
| 43. | முனவீர பட்டபெந்திகே சமந்தி மாத்தறை | | X | | 2022/12/08 | மாத்தறை பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. | - | - | - | - |
| 44. | பி.பி. குணதாச மாத்தறை | | X | | 2022/12/15 | மாத்தறை பிரதேச செயலகம் | விண்ணப்பதாரியிடம் இருந்து பதில் இல்லை | - | - | - | - |
| 45. | பி.பீ. வசந்தா நீலமணி மாத்தறை | | X | | 2022/12/22 | பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் | விண்ணப்பதாரியிடம் இருந்து பதில் இல்லை | - | - | - | - |
| 46. | மஹவிதான தனுஜ சமிந்த அலெக்சாண்டர் மாத்தறை | | X | | 2022/12/30 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 47. | அலன் கமகே மாத்தறை | | X | | 2023/01/27 | கல்வி அமைச்சு | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 48. | ஏ.ஜி.தேஷிக்கா கயனி மாத்தறை | X | | | 2023/01/28 | மாத்தறை கமநல சேவைகள் நிறுவனம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 49. | அப்பு கப்புகே நந்தாவதி மாத்தறை | | X | | 2023/01/30 | பேராதனை கமத்தொழில் திணைக்களம் | விண்ணப்பதாரியிடம் இருந்து பதில் இல்லை | - | - | - | - |
| 50. | கிறிஷ்ணன் சந்திரலால் காலி | | X | | 2022/06/01 | வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 51. | ஜி.எச்.சோமசிறி காலி | | X | | 2022/06/01 | அரச சேவைகள் ஆணைக்குழு கல்வி அமைச்சு | தகவல்கள் கிடைக்கவில்லை | தகவல் விண்ணப்பதாரி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை | - | - | - |
| 52. | | | X | | 2022/06/22 | கல்விப் பணிப்பாளர் | விண்ணப்பதாரியிடம் | - | - | - | - |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பி.எவ்.ஆர். பிரேமசந்திரன் காலி | | | | | காரியாலயம் | இருந்து பதில் இல்லை | | | | |
| 53. | அருமப்பெரும ஆரச்சிகே சுமனதாச காலி | | X | | 2022/07/04 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | விண்ணப்பதாரியிடம் இருந்து பதில் இல்லை | - | - | - | - |
| 54. | முனிபல்ல ஆரச்சிகே சரத் காலி | | X | | 2022/07/04 | பிரதேச செயலகம் | தகவல்கள் கிடைக்கவில்லை | தகவல் விண்ணப்பதாரி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை | - | - | |
| 55. | வெல்லான கமகே தர்மதாச காலி | | X | | 2022/07/25 | தொழிற் திணைக்களம் | விண்ணப்பதாரியிடம் இருந்து பதில் இல்லை | - | - | - | |
| 56. | தாமுரே வித்தானாச்சி புஷ்ப்பா சந்திரலதா காலி | | X | | 2022/09/13 | காலி தபால் காரியாலய ஓய்வூதியத் திணைக்களம் மாவட்ட நிருவாகக் காரியாலயம் | விண்ணப்பதாரியிடம் இருந்து பதில் இல்லை | - | - | - | - |
| 57. | கே. சோமசிறி காலி | | X | | 2022/10/12 | பிம் சவிய | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 58. | வீரமுனி ஆரச்சிகே மாலனி காலி | X | | | 2022/11/21 | அளவையியலாளர் திணைக்களம் | தகவல்கள் கிடைக்கவில்லை | - | - | - | - |
| 59. | ஏ.இரோஷா கங்கா குமரி மென்டிஸ் காலி | | X | | 2022/11/23 | வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | தகவல்கள் கிடைக்கவில்லை | - | - | - | - |
| 60. | பலொல்பிட்டிய கமகே பியசேன காலி | | X | | 2023/02/24 | ஓய்வூதியத் திணைக்களம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 61. | ஏ.எச்.சாந்தி குமாரி குருணாகல் | | X | | 2022/05/31 | ஓய்வூதியத் திணைக்களம் | விண்ணப்பதாரியிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை | - | - | - | - |
| 62. | எச்.எம்.சந்திராவதி குருணாகல் | X | | | 2022/06/28 | கொபைகனே பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை | - | - | - | - |
| 63. | ஞானவீர திசாநாயக்க குருணாகல் | X | | | 2022/08/08 | மாவத்தகம பிரதேச செயலகம் | தேவையான தகவல்கள் கிடைக்கவில்லை | - | - | - | - |
| 64. | தர்ஷன அமரதுங்க குருணாகல் | | | X | 2022/11/03 | உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், | விண்ணப்பதாரியிடம் இருந்து பதில் இல்லை | - | - | - | - |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | குருணாகல் | | | | | |
| 65. | சரத் பத்மசிறி குருணாகல் | | X | | 2023/01/02 | இலங்கை வங்கி பிரதேச செயலகம் குருணாகல் | போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை | ஆம் | பதில் இல்லை | ஆம் | விசாரணைகளுக்கு அழைக்கப் படவில்லை |
| 66. | ஞானவீர திசாநாயக்க குருணாகல் | X | | | 2023/01/13 | தபாற் காரியாலயம் குருணாகல் | போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை | ஆம் | போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை | ஆம் | ப்ர¾லும ி'லன டநழதன கமனரந்; |
| 67. | ஞானவீர திசாநாயக்க குருணாகல் | | X | | 2023/01/25 | மாவத்தகம பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை | - | - | - | - |
| 68. | நிலந்தி சாகரிக்கா கம்பஹா | X | | | 2022/05/05 | ஜா-எல பிரதேச சபை | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 69. | ஜி.டி.ஜகத் புஷ்பகுமார கம்பஹா | | X | | 2022/05/05 | தேசிய நீர்வழங்கல் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 70. | நிவ்டன் டொமினிக் கம்பஹா | | X | | 2022/06/18 | கல்வி அமைச்சு | போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை | - | - | - | - |
| 71. | நீத்தா நெலும்தெனியா அனுராதபுரம் | | X | | 2022/05/10 | தலாவ பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 72. | கே.ஜே.எம் ஜயதிஸ்ஸ அனுராதபுரம் | X | | | 2022-09-30 | அனுராதபுரம் மாநகர சபை | தேவையான தகவல்கள் அவர்களது பொறுப்பில் இல்லை எனவும் பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது | - | - | - | - |
| 73. | கே.ஜே.எம்.ஜயதிஸ்ஸ அனுராதபுரம் | X | | | | நுவரகம்பலாத பிரதேச செயலகம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன | - | - | - | - |
| 74. | கே.எம்.சித்திரசேன அனுராதபுரம் | | X | | 2022/12/05 | அனுராதபுரம் மாகாண கல்விக் காரியாலயம் | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. | - | - | - | - |
| 75. | NCDF கந்தளாய் | X | | | 2022/12/26 | காணி அமைச்சு LRC | போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. | - | - | - | - |

**RIGHT TO LIFE**
HUMAN RIGHTS CENTRE

Right to Life human Rights Center
No. 56/2, Palitha Place, Colombo 09, Sri Lanka
Tel/Fax: +94 011 266 9100
Email : right2lifelk@gmail.com
Web : www.right2lifelk.org